Reg. No. M 1434

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# நாடார்குலமித்திரன்

DIEU ET MON DROIT

T.C.N & SONS MADURA

| விளம்பர விகிதம். |
|---|
| அங்குலம் 1-க்கு அணா 4. விபரம் எழுதவும். |

திங்கட்கிழமை தோறும் நிகழ்வது.

'கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்'' (திருக்குறள்)

சு. ஆ. முத்து நாடார், பத்திராசிரியர்.

| சந்தா விபரம். | |
|---|---|
| உள் நாடு | ரூ 4 |
| வெளி நாடு | ரூ 5 |

மலர் 9 | கலியப்த ௫௰ ௫௲௨௲ பிரபவ௵ ஆவணி ௴ ௬ ௨ திங்கட்கிழமை 1927 ௵ ஆகஸ்டு ௴ 22௨ | இதழ் 1

## நாடார்பாங்குலிமிட்டெட், தூத்துக்குடி.

### விசேஷ வட்டி.

ஒரு வருஷத்துக்குக் குறையாமல் தவணைக்குப்போடும் தொகைக்கு வருஷம் ஒன்றுக்கு ரூபாய் 100க்கு ரூ 6வீதம் வட்டி கொடுக்கப்படும்.

விசேஷமாய் மைனர்கள், விதவைகள், பள்ளிக்கூடங்கள், பேட்டைகள் மகமை முதலிய பொது ஸ்தாபனங்களின் பணத்தை பந்தோபஸ்தாயும் நல்ல வட்டியிலும் வைப்பதற்கு இதுவே ஏற்ற இடம். அவரவர்களுக்கு வேண்டிய பிரகாரம் மைனர்கள், கார்டியன்கள், அல்லது காரியதரிசிகள், பேரால் கணக்குவைத்து யாரிடம் வட்டியும் முதலும் கொடுக்க விருப்பமோ அவ்விதம் கொடுக்க ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

கரன்ற் அக்கவுண்டிலும், சேவிங்ஸ் பாங் கணக்கிலும் பணம் போட்டு தேவையானபோது எடுத்துக் கொள்ளலாம். விபரங்களைப் பற்றி ஏஜெண்டுக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

## "நாடார்குல மித்திரன்" புஸ்தக சாலை.

| | ரூ. அ. பை. |
|---|---|
| ஜெம்புலிங்க நாடார் ஜீவிய சரித்திரம் | 0—12—0 |
| அலரிய நாடார் ஜீவிய சரித்திரம் | 0—8—0 |
| மகாமாயன் | 0—12—0 |
| ஜெயப்பிரகாசன் | 0—12—0 |
| சௌந்தரகாந்தி | 0—12—0 |
| ஜெயவீரபாண்டியன் | 0—8—0 |
| மதனசுந்தரம் | 0—8—0 |
| ஸ்வர்ணபாய் | 1—0—0 |
| விநோத விகட கோர்ட் விதவா விவாகக் கேஸ் | 0—4—0 |
| பள்ளிப் பகட்டு | 0—2—6 |
| தலைவாங்கிய தனுவதி | 0—12—0 |
| வனஜ லோசனி | 0—6—0 |
| ரத்னமாலை | 0—6—0 |
| நாடார் மகாஜன 5—வது கான்பரன்ஸ் ரிப்போர்ட் | 0—4—0 |
| பாரத புத்திரர் பாசுர பூஷணம் | 0—5—0 |
| க்ஷத்திரியகுல சன்மார்க்க பூஷணம் | 0—4—0 |
| நாடார் மகாஜன சங்க வாரக கீர்த்தனை | 0—8—0 |
| செல்வரசக் கீர்த்தனை | 0—3—0 |
| ஸ்ரீ முத்துமாரியம்மன் சங்கீதமாலை | 0—4—0 |
| அனவரதம் செல்வ விநாயகர் திருவிளையாடல் | 0—6—0 |
| மச்ச முனிவன் சரிதை | 0—4—0 |
| கிறிஸ்து பகவான் கிருபா கீர்த்தனை | 0—4—0 |
| விகட வேசியர் மாலை | 0—1—0 |
| ஸ்ரீ முத்துமாரியம்மன் திருவிழாச் சிந்து | 0—1—0 |
| நடராஜர் பதிகம் | 0—1—0 |
| கிறைகுள வல்லியம்மன் கலி வெண்பா | 0—0—6 |

வியாபாரிகளுக்கும், மொத்தமாக வாங்குபவர்களுக்கும் கமிஷன் கொடுக்கப்படும். விபரத்திற்கு எழுதவும்.

விலாசம்:—

"நாடார்குல மித்திரன்" புஸ்தகசாலை,
நாடார் ஹைஸ்கூல் வீதி,
அருப்புக்கோட்டை.

## போலிப்பொடிகளினகேல்|ஆனா|செலலாது

24 தங்கமெடல்கள் பரிசுபெற்று ஆயிரக்கணக்கான நற்சாக்ஷிகள் குவியப்பெற்ற

மதராஸ் N. V. ஷண்முகம் கம்பெனியார்

# ஸ்பெஷல்பட்டணம்பொடி

காரம், மணம், குணம், நிறம், வாடை கமழுகின்றன.

உபயோகித்த கனவான்கள் மனதை குதூகலிக்கச் செய்கிறது.

தினசரி நற்சாக்ஷிகள் குவிகின்றன.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## ஸத்திய தரிசனம்.

## மகாத்மா காந்தியின் ஜீவியசரித்திரம்.

4-ம் பிரிவு 11-வது அத்தியாயம்.

மகாத்மா காந்தி "நவஜீவன்" பத்திரிகையில் தொடர்ச்சியாக எழுதி வரும் தமது வரலாறு பின் வருமாறு:—

இந்த அத்தியாயமானது இந்தக் கதையை வாரா வாரம் நான் எவ்விதம் எழுதி வருகிறேனென்பதைச் சொல்ல வேண்டிய நிலைமைக்கு என்னைக் கொண்டு வந்து விட்டது.

நான் இதை எழுத ஆரம்பித்த காலத்தில் ஒரு நிலையான திட்டம் போட்டுக் கொள்ளவில்லை. என்னுடைய பரீக்ஷைக் கதைகளைச் சொல்லுவதற்கு என்னிடத்தில் ஞாபகக் குறிப்பாவது, வேறு தஸ்தாவேஜுகளாவது இல்லை. நான் எழுதுகையில் என் மனதில் ஞாபகத்திற்கு வருபவைகளை வரிசையாகச் சொல்லி வருகிறேன். நான் எல்லாக் காரியங்களையும் என்னுள்ளிருக்கும் ஆத்மா சொல்லுகிறபடி தான் செய்து வருகிறேனென்று நிச்சயமாக நானே தெரிந்து கொள்ளவில்லை. இருந்தாலும் நான் செய்திருக்கும் பெரிய காரியங்களையும், சிறிய காரியங்களையும் கவனிக்கையில் அந்தராத்மா சொன்னபடியே நான் நடந்து கொண்டு வந்திருக்கிறேனென்று சொல்வது அனுசிதமாகாது.

நான் ஆண்டவனைப்பார்த்ததுமில்லை; அவரைப்பற்றித் தெரிந்துகொண்டதுமில்லை. உலகுக்குக் கடவுளிடம் இருக்கும் நம்பிக்கை எனக்கும் இருக்கும்படி செய்து கொண்டிருக்கிறேன். என் மனதில் ஏற்படும் நம்பிக்கையை அனுபவ பலனென்றே நான் நினைக்கிறேன். ஆனால், ஒரு நம்பிக்கையை அனுபவ ஞானமென்று சொல்வது உண்மைக்கு மாறாக இருக்குமாதலால், எனக்கு ஆண்டவனிடத்திலுள்ள நம்பிக்கையைக் குறிப்பிடுவதற்குச் சரியான பதங்கள் அகப்படவில்லையென்று சொல்லுவதே பொருத்தமாக இருக்குமென்று தோன்றுகிறது.

இதிலிருந்து என்னுடைய அந்தராத்மா சொல்லுகிறபடி நான் இந்த வரலாற்றை எழுதிவருகிறேனென்று சொல்லுவதன் அர்த்தத்தைத் தெரிந்துகொள்ளலாம். நான் முந்தின அத்தியாயத்தை ஆரம்பித்த காலத்தில் இதற்குக் கொடுத்திருக்கும் மகுடத்தை அதற்குக் கொடுத்திருந்தேன். ஆனால் அதை எழுதி வருகையில் ஐரோப்பியர்கள் சம்பந்தமாக எனக்கு ஏற்பட்ட அனுபவங்களைச் சொல்லுமுன் பூர்வ பீடிகையாகச் சில விஷயங்களைச் சொல்ல வேண்டுமென்று என் புத்தியில் பட்டது. அவ்விதமே செய்து மகுடத்தையும் மாற்றிக் கொண்டேன். இந்த அத்தியாயத்தை ஆரம்பிக்கையில் இன்னொரு பிரச்னை ஏற்பட்டிருக்கிறது. நான் பிரஸ்தாபிக்கப் போகும் ஆங்கிலேய நண்பர்களைப்பற்றி எனக்குத் தெரிந்த விஷயங்களில் எதைச் சொல்லுவது, எதை நிறுத்திக் கொள்ளுவது என்பது பெரிய பிரச்னையாக இருக்கிறது. இதற்கு சம்பந்தமுள்ள விஷயங்களைச் சொல்லாமலிருந்தால், உண்மை வெளிப்படாமற் போய்விடும். எவைகள் பிரஸ்தாப விஷயத்திற்குச் சம்பந்தமுடையவை யென்று சட்டென முடிவு செய்து கொள்ளுவதும் கஷ்டமாகவிருக்கிறது.

எல்லாருடைய ஜீவிய சரிதைகளும் சம்பூரணமானவைகளாக இல்லாமல் தானிருக்க முடியுமென்று வெகு காலத்திற்கு முன் நான் படித்தது உண்மை யென்பது இப்பொழுது தெரிகிறது. எனக்கு ஞாபகமிருக்கும் எல்லா விஷயங்களையும் இதில் நான் குறிப்பிடவில்லை யென்பது எனக்குத் தெரியும். யார் தான் உண்மையில் எவ்வளவு சொல்வது, எவ்வளவு நிறுத்திக் கொள்வதென்று சொல்ல முடியும்? என்னுடைய வாழ்வில் சில அம்சங்களை ஒரு தலைப் பக்ஷமாகவே நான் சொல்லி வந்தால் நியாய ஸ்தலங்களில் அவைகளுக்கு எவ்வித மதிப்பு இருக்கும்? நான் ஏற்கெனவே எழுதியிருக்கும் அத்தியாயங்களைப் பற்றி யாரேனும் குறுக்கு விசாரணை செய்தால் இன்னும் பல விஷயங்கள் வெளிப்படும். அவர் எதிராளியாகவிருந்தால் "என்னுடைய வேஷத்தின் போலித் தன்மை"யை வெளிப்படுத்தி விட்டதாக அவர் பெருமை பேசிக் கொள்ளலாம்.

ஆகையால் இதை எழுதிக்கொண்டு வருவதை நிறுத்திவிடக் கூடாதாவென்ற எண்ணம் எனக்கு ஏற்படுகிறது. ஆனால் என்னுடைய அந்தராத்மாவானது அவ்விதம் செய்யும்படி கட்டளையிடாத வரையில் நான் எழுதிக்கொண்டு வரவேண்டியது தான். ஆரம்பித்த ஒரு காரியம் தவறென்று ருஜுவானாலன்றி அதை விட்டுவிடக் கூடாதென்ற பழையகால தர்மத்தைக் கைப்பற்ற வேண்டியது தான்.

என்மீது தோஷங் கூறுவோரைத் திருப்தி செய்வதற்காக என்னுடைய வரலாற்றை நான் எழுதவில்லை. இதை எழுதுவதே ஸத்தியப் பரீக்ஷை செய்வதாக இருக்கிறது. என்னுடைய சகாக்கள் சில விஷயங்களைச் சிந்திக்கும்படி செய்வதே நான் இதை எழுதுவதன் நோக்கம். அவர்களுடைய வேண்டுகோளின் பேரிலேயே நான் இதை எழுத ஆரம்பித்தேன். ராஜீயம் சாஸனம், ஸ்வாமி ஆனந்தரும் வற்புறுத்தியிராவிடில் நான் இதை எழுத ஆரம்பித்திருக்கமாட்டேன். நான் இதை எழுத ஆரம்பித்தது பிசகு தான். இந்தப் பிசகுக்கு அவர்களும் ஜவாப்தாரிகள் தான்.

தலைப்பில் கண்ட விஷயத்திற்குத் திரும்புகிறேன். என்னுடைய குடும்பத்தினரைப்போல் சில இந்தியர்கள் என்னுடன் வசித்து வந்ததுபோலவே ஆங்கிலேய நண்பர்கள் சிலரும் என்னுடன் வசித்துவந்தார்கள். அனைவருக்கும் அது திருப்தியாக இருந்ததென்று நான் சொல்லவில்லை. அவர்களில் சிலரை என்னுடன் சேர்த்துவைத்துக் கொண்டதும் சரியானதல்ல. சிலரால் எனக்குக் கஷ்டமுமேற்பட்டது. அவ்விதம் எனக்கு இருந்தாலுமே நான் சிலர் கஷ்டமுண்டுபண்ணினார்கள். இந்த அனுபவம் எனக்கு ஏற்பட்டதற்கு நான் வருத்தப்படவில்லை. இந்த அனுபவங்கள் எனக்கு ஏற்பட்டும், நான் எனது நண்பர்களுக்குக் கஷ்டத்தையும் அசௌகரியத்தையும் உண்டுபண்ணியும் நான் என்னுடைய குணத்தை மாற்றிக் கொள்ளவில்லை. எனது நண்பர்கள் பொறுத்துக் கொண்டிருந்திருக்கிறார்கள். என் அந்நியர்களுடன் பழகிய சோரணையானது என்னுடைய நண்பர்களுக்குக் கசப்பாகவிருந்ததால் நான் அவர்களைக் குற்றம் கூறுமலிருந்ததில்லை. நம் மாத்மாவில் இருக்கும் கடவுள் எல்லாருடைய ஆன்மாக்களிலும் இருக்கிறாரென்று நினைக்கிறவர்கள் எல்லாருடைய மத்தியிலும் வசித்திருக்கத் தயாராக இருக்க வேண்டும். அவர்களுடன் நெருங்கிப் பழகினால் தான் அது சாத்தியப்படும்.

ஆகவே போயர் யுத்தம் ஆரம்பித்த காலத்தில் என்னுடைய வீடு நிரம்பியிருந்தபோதிலும், ஜோஹன்ஸ்பர்க்கிலிருந்து வந்த இரண்டு ஆங்கிலேயர்களையும் நான் சேர்த்துக்கொண்டேன். அவர்கள் இருவரும் பிரம்மஞான சங்கத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களில் ஒருவர் பெயர் மிஸ்டர் கிட்சின். அவரைப்பற்றி அதிகமாகத் தெரிந்துகொள்ள பிறகு சந்தர்ப்பம் வாய்க்கும். இவ்விருவராலும் என் மனைவி அடிக்கடி துக்கப்பட நேர்ந்தது. துரதிஷ்டவசமாக எனக்காக என் மனைவி பல தடவைகளில் துக்கப்பட நேர்ந்திருக்கிறது. இதுதான் ஆங்கிலேயர்களை என் வீட்டில் நான் வைத்துக் கொண்ட முதல் தடவை. நான் இங்கிலாந்திலிருந்த காலத்தில் ஆங்கிலேயர்களுடைய வீடுகளில் தங்கியிருக்கிறேன். அதனால் அங்கு அவர்களுடைய வழக்கங்களை அனுசரித்திருந்து, போஜனசாலைகளிலிருப்பது போல் காலந்தள்ளினேன். இங்கு அதற்கு நேர்விரோதமாக இருந்தது. இந்த ஆங்கில நண்பர்கள் என்னுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகி விட்டார்கள். வீட்டு ஏற்பாடுகள் மேனாட்டு சம்பிரதாயத்தை ஒட்டியிருந்தாலும், உள்வாழ்க்கை இந்திய மயமாகவே இருந்தது. அந்த ஆங்கில நண்பர்களை என்னுடைய குடும்பத்தினரைப்

## ஜாவாவில் அதிசயக் காட்சிகள்.

### இங்கும் கவி. ரவீந்திரரா?

(ஸ்ரீ காளிதாஸ நாக் எழுதுவது)

#### கப்பல் பிரயாணம்.

1924-ம் வருடம் கிழக்குமகா சமுத்திரத்தில் நாங்கள் பிரயாணம் செய்து கொண்டிருந்தோம். சைகோன் என்னுமிடத்திற்கும் சிங்கப்பூருக்குமிடையிலுள்ள கடல் கொந்தளிக்க ஆரம்பித்தது. நாங்கள் பிரயாணம் செய்துகொண்டிருந்த கப்பலோ மிகவும் சிறியது. தற்கால நாகரீக வசதியில்லாதது. கடல் கொந்தளிக்கும் சமயத்தில் அக்கப்பல் பட்டபாடு நாவினால் எடுத்துரைக்க இயலாது. அலைகளோ மலையுயரம் எழும்பிக் குதிக்கின்றன. கப்பல் எங்கு தலைகீழாக கவிழ்ந்து விடுமோ எனப் பயந்தோம். எப்பொழுது கரை காண்போம் என்ற கவலை பெரிதாயிற்று. நாங்கள் போய்ச் சேரவேண்டிய நாட்டைப்பற்றி கனவு கண்டு கொண்டிருந்தோம். இரவு வந்துவிட்டால் எங்கள் கவலை பன்மடங்கு அதிகமாகும். என் செய்வோம்! என்செய்வோம்! என்ற கூக்குரலே எங்கள் செவிகளில் விழுந்தது. என் கவலையை மறக்கும் பொருட்டு என்னிடமிருந்த ஒரு கவியின் புத்தகத்தைப் படிக்க ஆரம்பித்தேன். இவ்விதமாகமூன்று பகல்களும், நான்கு இரவுகளும் கழிந்தன. கடைசியாக சிங்கப்பூர் துறைமுகம் வந்துசேர்ந்தோம்.

ஆஹா! இப்பொழுதுதான் என் உயிர் என்னிடம் வந்தது. இப்பொழுதுதான் கப்பலிலுள்ள ஜனங்கள் முகம் மலர்ந்தது.

#### சிங்கபுரப் பெருமை,

சிங்கப்பூரின் பெருமை தான் என்னே! பல்லாயிரக் கணக்கான வியாபாரிகளுக்கு உணவளிக்கும் துறைமுகத்தைக் கண்டதும் எங்கள் கண்கள் குளிர்ந்தன.

சிங்கப்பூர் புராதனப் பெருமை வாய்ந்த நகரன்றோ? அதன் புராதனப் பெயர் சிங்கபுரம். நகரின் பெயரே நமக்கெவ்வளவு மகிழ்ச்சியைத் தருகின்றது. இப்பெயரைக் கேட்டவுடனேயே, எனக்குப் பல விஷயங்கள் நினைவிற்கு வருகின்றன. இந்தியக் கப்பல் வியாபாரிகள்பல்லாண்டுகளுக்கு முன்பு இங்கு வியாபார நிமித்தம் குடியேறினர். இந்திய வியாபாரச் சிங்கங்கள் கடலைத்தாண்டி இந்நகருக்கு வந்து கர்ஜித்ததனால் இதற்கு சிங்கபுர மென்று பெயர் கொடுத்தனர் போலும். இந்நாட்டிற்குக் கொடுக்கப்பட்ட பெயர் மிகவும் பொருத்தமானதே. சிங்கபாகுஎன்ற ஓர் பராக்கிரம அரசன் இந்திய நாட்டை விட்டு, கடல்களைத் தாண்டி இந்நாட்டை ஜெயித்து தன் வசமாக்கிக் கொண்டு, பல ஜனங்களை குடியேறச்செய்து, என்றும் அழியாப்புகழை அடைந்து, ஜனங்களால் ஜயவீரனெனக் கொண்டாடப்பட்ட சரித்திரம் இன்னும் என் நெஞ்சையள்ளுகின்றது. ராமாயண மென்னும் இதிஹாஸத்தை வரைந்த வால்மீகர், ஸ்ரீ ராமபிரான் சமுத்திரத்தின் மீது அணைகட்டியதைப்பற்றியும், அவர் இலங்கையின் மீது படையெடுத்து, சீதையைச் சிறைப்படுத்திய ராவணனையும், அவனது கொடிய அரக்கர் பரிவாரங்களையும் ஜயித்ததைப்பற்றியும் பலவாறு புகழ்ந்திருக்கிறார். ஆனால் இந்தியர்கள் பல்லாண்டுகளுக்கு முன் குடியேறிய சொர்ண பூமியாகிய சிங்க புரத்தைப் பற்றி ஒன்றும் சொல்லக்காணோம். அவர் மனதில் நினைத்த சொர்ணபூமி இலங்கையாயினும், அது மலேயா நாடாயிருப்பினும் ஒன்றே; அல்லது கிழக்கிந்திய தீவுகளாயிருப்பினும் ஒன்றே. அதைப்பற்றி நாம் இப்பொழுது விவாதிக்க வேண்டியதில்லை.

சிங்கபுரமென்ற நன்னாட்டில் பல்லாயிரவருடங்களுக்கு முன்பு இந்தியர்கள் குடிபோந்து அந்நாட்டைச் சிறப்புறச்செய்தனரென்பதை எவரும் மறுக்கமுடியாது. இவ்விதபுராதனப் பெருமை வாய்ந்த சிங்கநாட்டின் புகழைப்பற்றிக் கவிபாட கவிஞர்கள் இல்லாமல் போயினரோ? அதன் சரித்திரத்தை வரைய ஆசிரியர்கள் அகப்படாமல் போய்விட்டனரோ? என்று மழியாப்புகழ்பெற்ற சிங்கபுர மன்னர்கள் சரித்திரம் உலகில் என்று எழுதப்படுமோ! அறியேனே.

#### சிங்கங்களெங்கே?

இந்நாட்டில் முன்பு கர்ஜித்த இந்திய சிங்கங்கள் இப்பொழுது எங்கே? அவர்களைப் பற்றிப்பேசுவோர் எவரையும் காணேமே. இந்திய சிங்கங்கள் கர்ஜித்ததுபோய், பலதேச சிங்கங்களல்லவோ இங்கு கர்ஜித்துக் கொண்டிருக்கின்றன. சிங்கபுரத் துறைமுகத்திற்குள் அடியெடுத்து வைக்கையிலேயே, இந்திய வியாபாரச் சிங்கங்கள் அன்றுபோலவே, இன்றும் கர்ஜிப்பதாக என் கண்ணுக்குத் தோற்றுகின்றன. நான் காண்பது கனவோ நினைவோவென எனக்குச் சந்தேகமுண்டாகின்றது. இல்லை! இல்லை! கனவுமில்லை; நினைவுமில்லை. என் கண் முன்பாகவே இந்திய சிங்கங்கள் கர்ஜிக்கின்றன. அதில் சிறிதும் ஐயமில்லை.

#### சர்க்கார் தொல்லை.

சிங்கங்கள் கர்ஜிக்கும் இந்நாட்டில் கூட சர்க்கார் தொல்லைகள் இறக்குமதி ஆய்விட்டன. நம்மிந்திய தேசப் புராதன மேதாவிகளான சாக்கிய முனிவர், நாகசேனர், குணவர்மன் இவர்களுடைய வம்சத்தைச் சார்ந்தவன் என்று நான் தெரிவித்துக் கொண்டேன். ஆனால் இவர்களுடைய பெருமைகளை சர்க்கார் அறியமுடியுமா? ஆதலாற்றான் எனக்கு பல தொல்லைகள் ஏற்பட்டன. சிங்கபுரத்திற்குள் நுழைபவர்கள் சர்க்காரிடம் அனுமதிச்சீட்டுப் பெற வேண்டும். இச் சீட்டைப் பெறுவதற்கு எத்தனை இடையூறுகள்! எத்தனை தொல்லைகள்!! பெரிய ஸ்வாமியைக் கும்பிடப்போவதற்கு முன், எத்தனை சில்லரை தேவதைகளுக்கு பூஜை போடுவது !!! அந்தோ! போதும் போதும். சிங்கபுரத்திலுள்ள ஒரு பெரிய சர்க்கார் வைத்தியசாலையில் எனது நண்பர் டாக்டர் பரிமளசேனர் பிரதம வைத்தியராகவிருந்தார். நான் அங்கு தங்கியிருக்கும் சமயத்தில் எனக்கு மிகுந்த உதவி புரிந்தார். எல்லா சில்லரை தேவதைகளையும் கும்பிடுவதில் பயனொன்றுமில்லை. டச்சு மந்திரியிடமே ஒரு பெரிய தேவதை ஒன்றிருக்கிறது. அதைப்போய் தரிசித்தால் எல்லாத் துன்பங்களும் நீங்குமென எனது நண்பர் என்னிடம் தெரிவித்தார். சரியென்று, அத்தேவதையினுலயத்திற்குச் சென்றேன். நம் நாட்டிலுள்ள தேவாலயங்கள் எனப்படுமிடமாவன சிறிது நன்றாகவிருக்கும். உள்ளெங்கும் புகையால் இருள் மூடப்பட்டிருந்தது. இதைக் கண்டதும், ஏதோ சாக்கிய முனிவர் முதலிய மேதாவிகளின் வம்சத்தைச் சார்ந்தவனென்று என்னை

[இதன் தொடர்பு 7-ம் பக்கம் பார்க்க]

போலவே வைத்துக் கொள்ளுவதில் சிறிதளவு கஷ்டமுமிருந்தது. ஆனால் அவர்களுக்கு ஒரு கஷ்டமுமேற்படவில்லை. டர்பானை விட ஜோஹன்ஸ்பர்க்கில் இவ்வித சம்பவங்கள் அதிகமாக நடைபெற்றன.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



# தற்கால இந்தியா

## வைதீகக் கொடுமையியல்.

### வைசிய ராட்சி வந்திருக்கிறது.

### தொழிலாளர் ஆட்சிவந்துகொண்டிருக்கிறது

[ சுவாமி விவேகானந்தர் அருளியது ]

வேத காலத்து வைதீகர்கள் தங்களுக்கிருந்த மிகுந்த பலத்துக்கு யக்ஞ மந்திரங்களின் அறிவையே ஆதாரமாகக் கொண்டிருக்கிறார்கள். இம்மந்திரங்களின் சக்தியால் தேவர்கள் தங்களுடைய திவ்ய வாசஸ்தலங்களிலிருந்தும் கீழே இறங்கி வந்து ஆகுதி செய்யப்பட்ட ஆகார பானாதிகளை ஏற்றுக்கொண்டு எஜமானர்களுடைய பிரார்த்தனைகளை நிறைவேற்றிவைக்கிறார்கள். அரசர்களும், அவர்களது குடிகளும் தங்களுடைய பூவுலக வாழ்க்கையில் தாங்கள் சுகவாழ்வு வாழும் பொருட்டு இந்த வைதீகர்களிடத்தில் வேண்டி நிற்கிறார்கள். ராஜ சோமமானது வைதீகனால் பூஜிக்கப்பட்டு அவனுடைய மந்திரங்களின் சக்தியினால் செழிப்புறும்படி செய்யப்படுகிறது. ஆகையினால் வைதீகனால் ஆகுதியில் அளிக்கப்பட்ட சோம ரசத்தைப் பிரியமான ஆகாரமாகவுடைய தேவர்கள் அவனிடத்தில் எப்பொழுதும் அன்புடையவர்களாய் அவன் கேட்கும் வரங்களைக் கொடுக்கிறார்கள். இவ்வாறு தேவ கிருபையினால் பலமடைந்தவனாகி அவன் மனுஷ சக்தி எல்லாவற்றையும் எதிர்த்து நிற்கிறான். ஏனெனில், தேவர்களுடைய சக்திக்கு விரோதமாக மனிதர்களுடைய சக்தி என்ன செய்ய முடியும்? பூ சக்தி எல்லாவற்றுக்கும் மத்தியஸ்தானமாயுள்ள அரசனும் அவனுடைய வீட்டு வாசலில் காத்து நிற்கிறான். அவனிடமிருந்து கிடைக்கின்ற அன்புடன் கூடிய கடாட்சம் ஒன்றே மிகப் பெரிய உதவியாம்; அவனுடைய ஆசீர்வாதமே சமஸ்தானத்துக்குக் காணிக்கையாம்; மற்றெல்லாவற்றினும் உயர்ந்ததாம். வைதீகர்கள் மரணமும், அழிவும் பயக்கக்கூடிய விஷயங்களிலே பிரவேசிக்கும்படி அரசனை ஆக்ஞாபிக்கின்றான். அன்பும் அறிவுமிகுந்த புத்திமதிகள் சொல்லிக்கொண்டு அரசனுக்கு நெருங்கிய நண்பனாயிருக்கின்றான். சாமர்த்தியமாக சூட்சமமான ராஜ தந்திர வலையை வீசி அரசனை அதில் சுலபமாக வசப்படுத்தி விடுகின்றான். இவ்விதமாக அவன் ராஜ சக்தியை அடியோடு தன்னிடம் அடங்கிக் கிடக்கும்படி அடிக்கடி செய்து விடுகிறான். எல்லாவற்றுக்கும்மேலாக மிகப்பெரியகாரியம் யாதெனில்; ராஜ அம்சத்தின் முன்னோர்களுடையவும், அவனுடையவும் அவன் குடும்பத்தினுடையவும், பெயரும், கீர்த்தியும் வைதீகனுடைய எழுதுகோலின் தயவை நாடி இருக்கின்றன. அவனே சரித்திராசிரியன். அரசன் சர்வாதிக்க சக்தியை உடைத்தாயிருக்கலாம்; தனது ராஜ்ய பாரத்திலே பெருங்கீர்த்தி யடையலாம்; குடிகளுக்கு மாதா பிதாவாயிருக்கலாம். ஆனால் வைதீகன் திருப்தி செய்யப்படாவிட்டால் அவனுடைய கீர்த்தி ஆதித்தன் அவனுடைய கடைசி மூச்சோடு என்றுமே அஸ்தமித்தவனாய் விடுவான். அமைதியான பனி எப்படி சமுத்திரத்தில் விழுந்து விடுகிறதோ அதுபோல்ஜனத் முழுதும் புகழ்படுவதற்கு யோக்கியதையுள்ள அவனுடைய நன்மையும், உபகாரமும் காலமாகிற பெரிய கருவக்குன்னே மறைந்துவிடுகின்றன. ஆனால் அனேக வருஷங்கள் நீடிக்கும்படியான பெரிய யாகங்கள் நடத்தியவர்கள், அசுவமேதம் முதலியவற்றைச் செய்தவர்கள், மழை காலத்திலே இடைவிடாது பொழியுமழையைப் போல் வைதீகர்களுக்கு அளவற்ற திரவியத்தை வாரி வாரிக்கொடுத்தவர்களாகியவர்களுடைய பெயர்கள் வைதீகர்களுடைய கிருபையால் சரித்திரத்தின் பக்கங்களில் பிரகாசப்படுத்தப்பட்டிருக்கின்றன. தேவர்களின் நேசனும் பிரியதர்சியுமான அசோகனுடைய பெயர் வைதீகத்தில் ஒரு பெயரேயன்றி வேறொன்றுமில்லை. ஆனால் பரீட்சித்து புத்திரனான ஜனமேஜயனுடைய பெயர் ஒவ்வொரு இந்துக் குழந்தையினும் சாதாரண வார்த்தையாயிருக்கிறது.

சமஸ்தானத்தைக் காப்பதாகவும், தன்னுடையவும், தனது பெரிய பரிவாரத்தினுடைய சுகங்கட்கும், ஆடம்பரங்கட்கும் ஆகிற செலவுக்காகவும், சர்வசக்தி வாய்ந்த வைதீகர்களைத் திருப்தி செய்து அவர்களுடைய பொக்கிஷங்களை நிரப்புவதற்காகவும், அரசன் சூரியன் பூமியினின்றும் ஈரத்தை எப்படி உறிஞ்சுகின்றதோ அதுபோல் இடைவிடாது தனது குடிகளின் வளங்களை உறிஞ்சிக் கொண்டிருக்கின்றான். அவனுடைய முக்கியமான இரை அவனுடைய கறவைப் பசுக்கள் வைசியர்களேயாவர்.

ஹிந்து அரசர்களின் காலிலாகட்டும், பௌத்த அரசாட்சிகாலத்திலாகட்டும் சாதாரண குடி ஜனங்கள் சமஸ்தான விஷயங்களிலே தங்கள் அபிப்பிராயங்களை எடுத்துக் கூறிக் கலந்து கொண்டதாக காணவில்லை. சர்மர் வாரணவதத்திருக்கிற பொழுது வைசியா, சூத்திரர் வீடுகளுக்குப் போகிறார்; உண்மைதான். அயோத்திக்கு ராமனே அரசனாக்க வேண்டுமென்று அவர்கள் பிரார்த்திக்கின்றார்கள். அது மாத்திரமல்ல; அவர்கள் சீதையினுடைய நடத்தையில் குற்றங்கண்டு பிடிக்கவும், அவளை தேசப் பிரஷ்டம் செய்யும்படி செய்ய ஆலோசனைகளும் ரகசியமாகச் செய்து வந்திருக்கிறார்கள். ஆனால் சமஸ்தானத்தில் சம்மதிக்கப்பட்ட ஒரு விதியாக அவர்களுக்கு சாங்கத்தில் நேர் வார்த்தை கிடையாது. ஜனங்களுடைய சக்தி மறைமுகமான ஒழுங்கற்ற வழிகளில் எந்த முறையுமின்றி வெளிப்பட முயற்சிக்கிறது. இந்தச் சக்தி தங்களுக்கு உண்டு. ஜனங்களுக்கு இன்னும் நன்கு தெரியவில்லை. அதை ஒற்றுமையுடன் செய்கையில் கொண்டுவருவதற்கு, அவர்கள் முயற்சிப்பதில்லை. அப்படிச் செய்வதற்கு அவர்களுக்குத் திடசித்தமும் இல்லை. சிறியவைகளை வேறான சக்தியம்சங்கள் ஒன்று சேர்க்கப்பட்டு அதன் பயனாக அதிகமான பலத்தை யுண்டுபண்ணக்கூடிய அந்தச் சக்தியும் அந்தச் சமர்த்துமவர்களிடம் அணுவளவும் இல்லை.

இதற்குத் தகுந்த நியதிகள் இலாக்குறை காரணமா? அது அன்று. அரசாங்கத்தின் வெவ்வேறு இலாக்காக்களை நடத்திக் கொண்டு போதற்குத் தனித் தனியாகத் தெளிவாக முறைகளிருக்கின்றன. நியதிகள் இருக்கின்றன. கிஸ்தி வசூல், சைன்ய நிர்வாகம், நீதி பரிபாலனம், தண்டனைகள், வெகுமதிகள் இவை போன்ற ஒவ்வொன்றும் மிக மிக நுட்பமான விவரங்களுடன் விதிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் எல்லாவற்றுக்கும் ஆதாரமாய் ரிஷியின் ஆக்ஞை, தெய்வ அதிகாரவாக்கு. அருள் கொண்ட ரிஷியின் மூலமாக ஈஸ்வரப்பிரசாதம் இருக்கின்றன. அவை மிக்க கண்டிப்பானவை யென்று அனேகமாக சொல்லிவிடப் படக்கூடும். இத்தகைய சந்தர்ப்பங்களிலே ஜனங்கள் தங்களுடைய பொது நன்மைக்காக ஏதேனும் ஒரு நோக்கத்தைப் பூர்த்தி செய்துகொள்ளும் பொருட்டு ஒன்று சேர்ந்து ஒற்றுமைப்படக் கற்றுக்கொள்ளக் கூடிய, அல்லது அரசனும் குடிகளிடமிருந்து வசூலிக்கப்பட்ட சொத்துக்களில் பொதுஜனங்களுக்கு உரிமையுண்டு என்ற எண்ணத்தை யுண்டுபண்ணக் கூடிய ஒரு முகபுத்தியை உடைத்தாயிருக்கும்படியான எந்த விதக் கல்வியையும், அல்லது சமஸ்தான வருமானத்தையும், செலவையும் அடக்கியாளவல்ல பிரதிநிதித்வ உரிமையை அடைவதற்குள்ள ஆசையை உண்டுபண்ணக் கூடிய கல்வியைக் கூட ஜனங்கள் அடைவது ஒரு பொழுதும் சாத்தியமாயில்லை. அவர்கள் ஏன் அப்படிப்பட்ட விஷயங்களைச் செய்ய வேண்டும்? அவர்களுடைய செழிப்புக்கும், அபிவிருத்திக்கும் ரிஷியின் வாக்கு பொறுப்புடையதல்லவா?

இன்னும் அவ்விதிகளெல்லாம் புத்தகங்களிலிருக்கின்றன. புத்தகங்களில் குறிப்பிடப் பட்டுள்ள விதிகளுக்கும், அனுபவ வாழ்க்கையிலே உள்ள அவற்றின் அனுஷ்டானத்துக்கும் இடையே வித்தியாசம் ஓர் உலகளவு இருக்கின்றது. ஆயிரக்கணக்கான அக்கினிவர்ணர்கள் சென்ற பின்னரே ஒரு ராமச்சந்திரன் பிறக்கின்றான். அநேக அரசர்கள் சந்தசோகனுடைய வாழ்க்கையை நமக்கு நிரூபித்துக் காண்பிக்கின்றார்கள். தர்மசோகர்கள் அபூர்வமாயிருக்கிறார்கள். குடிகளும் ஜீவனைப் போலிருக்கின்ற அக்பர் போன்ற அரசர்களின் தொகை ஜனங்களின் ரத்தத்தின் மீது வாழ்கின்ற அவுரங்கசீப்போன்ற அரசர்களின் தொகையைப் பார்க்கிலும் குறைந்ததே.

அரசர்களில் தர்மன், இராமன், தர்மசோகன், அல்லது அக்பர் போன்ற திவ்ய குணம் வாய்ந்த அவர்களுடைய தர்ம ராஜாங்கத்திலே ஜனங்கள் ரக்ஷிப்பும் செழிப்பும் அடைந்து தங்கள் அரசர்களால் மக்களைப் போல் கவலையுடன் பாதுகாக்கப்பட்டு வந்தபோதிலும், எப்பொழுதும் இன்னொருவனால் ஊட்டப்படுகிறவனுடைய கையானது மெல்ல மெல்ல ஆகாரத்தைத் தனது வாய்க்குக்கொண்டு செல்லும் சக்தியை இழந்துவிடுகிறது. எவனொருவன் எப்பொழுதும் இன்னொருவனால் ரட்சிக்கப்பட்டு வருகிறானோ அவனுடைய தற்காப்புச் சக்தியானது ஒரு பொழுதும் பூரணமாக வெளிப்படமுடியாது. மிகப்பலமுள்ள வாலிபன் கூட, தன் பெற்றோர்களால் குழந்தைபோலவே எப்பொழுதும் கருதப்படுவானாயின் அவன் குழந்தையாகவே இருந்துவிடுகிறான். திவ்ய குணம்வாய்ந்த அரசர்களாலே எப்பொழுதும் ஆளப்படுகிறதினாலும் ஜனங்களைக் காப்பாற்றுவதும் அவர்களுக்கு வேண்டியன செய்வதும் ஆகிய முழுக்கடமையும் அரசர்களுடையதே யாகிவிடுகிறதினாலும் அவர்கள் ஸ்வராஜ்யக் கொள்கையை அறிந்துகொள்வதற்கு வேண்டிய சந்தர்ப்பம் ஒரு நாளும் அடையமுடியாது எல்லாவற்றுக்கும் அரசனையே முழுதும் சார்ந்துகொண்டு பொது நன்மைக்கோ அல்லது தற்காப்புக்கோ முயற்சி செய்யவேண்டிய கவலை ஒரு பொழுதும் இல்லாமலிருக்கின்ற ஒரு ஜனசமூகமானது மெல்ல மெல்ல உள்ளுள்ள சக்தியையும் பலத்தையும் இழந்தாய் விடுகிறது. சார்ந்திருத்தலும் ரட்சிப்புமாகிற இந்தஸ்திதி நெடுநாள் வளர்ந்துகொண்டே போனால் அது ஜனசமூக அழிவுக்குக்காரணமாகிவிடுகிறது. அது அழிவதற்கு நெடுநாட்கள் வேண்டா. மகரிஷிகளின் திவ்ய புத்திசக்தியினால் அருளப்பட்ட அறிவின் பலனாயுள்ள சாஸ்திரங்களில் விதிக்கப்பட்ட நியதி நியமங்களினால் தேசத்தின் ராஜாங்கம் நடத்தப்படுகிறபொழுது அத்தகைய ராஜாங்கமானது தனவந்தர், தரித்திரர், அறிவுள்ளவர், அறிவில்லாதவர், அரசன், குடிகள் எல்லோருடையவும் இடைவிடாத க்ஷேமத்துக்கு இட்டுச் செல்லத்தான் வேண்டுமென்பது புத்தியினால் தீர்மானிக்கப் படக்கூடும். ஆனால் அந்த நியதிகளின் அனுஷ்டானம் அனுபவவாழ்க்கையிலே எவ்வளவு தூரம் சாத்தியமாயிருந்தது அல்லது இருக்கலாம் என்பதை நாம் முன்னமேயே பார்த்திருக்கிறோம். ஆளப்பட்டவர்களுக்கு தங்களுடைய ஆட்சியிலுள்ள அதிகாரம் இதுவே. இக்காலத்து மேல்நாட்டுக் கொள்கை இந்த தேசத்தின் ஜனங்களின் ஆட்சி. ஜனங்களால் ஜனங்களின் நன்மைக்காயிருக்கவேண்டும் என்றவார்த்தைகளினுள்ள அமெரிக்கா அரசாங்கத்தின் பகிரங்கக் கூற்றில் இக்கொள்கையின் கடைசி வெளிப்பாடு இடியொத்த சப்தத்துடன் எதிரொலிக்கப் படுகிறது. பூர்வீக இந்தியாவில் அடியோடு இல்லவே இல்லை யென்று சொல்லிவிடமுடியாது. கிரேக்கயாத்திரிகர்களும் மற்றவர்களும் அனேக ஸ்வதந்திரமுள்ள சிறிய சமஸ்தானங்கள் இந்தத் தேசமுழுவதும் பரந்து கிடக்கக் கண்டார்கள். ஸ்வராஜ்யத்தின் வித்தானது கிராமப் பஞ்சாயத்து வடிவத்திலாவது இருந்தது என்பதில் சிறிதும் சந்தேகமே இல்லை. இந்தப் பஞ்சாயத்து முறை இந்தியாவின் அனேக பாகங்களில் இன்னும் இருக்கிறது. ஆனால் அந்த வித்து என்றும் வித்தாகவே இருந்துவிட்டது. அந்த விதை நிலத்தில் இடப்பட்டாலும் மரமாய் வளரவேயில்லை. ஸ்வராஜ்யத்தைப் பற்றிய இவ்வெண்ணமானது கிராமப் பஞ்சாயத்தின் அமைப்பாம் கருநிலைமையைக் கடந்து செல்லவேயில்லை. ஜனசமுதாயத்தினும் வியாபிக்கவேயில்லை.

(தொடரும்.)

---

## மதுரை, முனிசிபல் 14-வது வார்டு எலெக்ஷன்.

தேசாபிமானம் நிறைந்த தீரர்களே!

நமது நகரசபையில் 14-வது வார்டின் பிரதிநிதியாக நான் இருந்து ஊழியம் புரிவதைக்காட்டிலும், பொதுஜன ஊழியம் புரிவதில் தீவிர முற்போக்குடையவரும், எடுத்தகாரியத்தை தொடுத்து முடிப்பதில் கற்கியாதி பெற்றவரும், நகரசபைக்கு தேவையான ஆங்கில கல்வியில் தேர்ச்சியடைந்தவரும், மஹாஜனங்களின் க்ஷேமத்தை நாடி ஊழியம்புரிவதற்கு போதிய சாவகாசமுள்ளவரும், உங்களின் நேசரும், எனது ஆப்த நண்பருமான ஸ்ரீமான் க. முத்துக்குமாருநாடார் அவர்கள் நமது 14-வது வார்டின் பிரதிநிதியாக இருந்தால் பதின்மடங்கதிகமான நன்மைகள் செய்யக்கூடுமென என் மனதிற்றோன்றிய பூரண அபிப்பிராயத்தால் நான் அபேக்ஷகர் பதவியினின்றும் விலகிக்கொண்டேன். ஆதலால் பொதுஜன நன்மையைக் கோரும் ஒவ்வொருவரும் நமது நண்பர் அவர்களுக்கு அதிகமான வாக்கு (ஓட்) கிடைக்கும் முறையில் ஒத்துழைத்து அவருக்கு வெற்றிமாலை சூட்டி 14-வது வார்டு மஹாஜனங்களின் நன்மையைக் காப்பாற்றிக் கொடுக்கும்படி பணிவுடன் வேண்டிக்கொள்கிறேன்.

தங்கள் ஊழியன்

ப. வ. சோமசுந்தரநாடார்,

தலைவன்

நாடார் ஊழியப் பிரசார சபை.

பொக்கிஷதார்

மதுரைஜில்லா காங்கிரஸ் கமிட்டி.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection





சாதி குலம் பிறப்பிறப்புப் பந்த முத்தி
அருவுருவத் தன்மை நாம

மேது மின்றி யெப்பொருட்கு மெவ்விட
த்தும் பிரிவற நின் றியக்கஞ் செய்யுஞ்

சோதியை மாத்றா வெளியைமனக் கிழ
நிறைவான துரிய வாழ்வைத்

தீதில் பரமாம் பொருளைத் திருவருளே
நினைவாகச் சிந்தை செய்வாம்.

## நாடார்குல மித்திரன்

பிரபவ வரு ஆவணி மீ ௬ உ

## ஒன்பதாவது ஆண்டு.

நமது "நாடார்குல மித்திரன்" னுக்கு எட்டாவது ஆண்டு சென்ற வாரத்துடன் தீர்ந்து ஒன்பதாவது ஆண்டு இன்று ஆரம்பமாகி இருக்கிறது. கடந்த எட்டாண்டுகளாக நமது நாட்டுக்கும், நாடார் சமூகத்துக்கும் எவ்வாறு தொண்டாற்றி வந்திருக்கிறதென் பதை நாம் சொல்ல வேண்டியதில்லை. இடை இடை யெழுந்த பல கஷ்டங்களை யெல்லாம் வென்று செவ்வனே வெளிவந்து கொண்டிருப்பதை எல்லா நேயர்களும் நன்கறிவார்கள். மித்திரன் ஆரம்பத்தில் மாதப் பதிப்பாக விருந்து வர வர வளர்ந்து நாலு வருஷங்களாக வாரப் பதிப்பாகி வந்து கொண்டிருக்கிறது. ஆரம்ப நிலைமை—மாதப் பதிப்பாவது சரிவர நடைபெறுமா; ஜனங்கள் சரியான ஆதரவு செய்வார்களா வென்று சந்தேகப் பட்டோம். அப்போது சிலோனிலுள்ள நாடார் சமூகமளித்த ஊக்கத்தினால் நாம் தைரியமாக இத்துறையிலிறங்கினோம். பின்னர் நாடார் சமூகமனைத்தும் நல்லாசியும், நல்லாதரவும் தந்துளது. நாலாவதாண்டு மாத மும்முறையில் மொத்தம் 2000 சந்தாதார்களையுடைத்தாயிருந்தது. இவ்வூக்கத்தைக் கொண்டு சிலோனுக்கும் பர்மாவுக்கும் போய் வந்து ஐந்தாவதாண்டில் வாரப் பதிப்பாக்கினோம். சந்தாதார்கள் வர வரக் குறைய வாரம்பித்தது; தள்ளாத வழக்கொன்று தலைமேல் வந்து சார்ந்தது; சேர்ந்த பணமெல்லாம் செலவாய் விட்டது. தேசத்திலும், சமூகத்திலும் புத்துணர்ச்சி குன்றி அதிக சித்திரைக் குறிகள் தோன்றின. ஆயினும் நாம் சற்றும் சலிப்பின்றி கடமையைச் செய்தே வந்தோம். மூன்று வருஷங்களுக்குள் ஆயிரம் சந்தாதார்கள் குறைந்துவிட்டனர். 2000ம் ரூபாய்க்கு மேல் சந்தாப் பணம் கொடுக்காமல் நிறுத்திக் கொண்டார்கள். மித்திரனுக்கு சுமக்க முடியாத கடன் சுமை ஏறி, இருப்பதா இறப்பதா என்ற நிலைமையில் ஆரம்பித்த க்ஷேம நிதி லாட்டரியால் ஒருவாறு உயிருடனிருக்க நேர்ந்தது. இனி சஞ்சலமின்றி சமூகத்துக்கு வேண்டிய தொண்டாற்றி வரக் கூடுமென்று நம்புகிறோம்.

இரண்டாயிரம் சந்தாதார்களிருந்து, ஆயிரமாகப் போவானேன் என்று பலர் கேட்கலாம்; கேட்டுமிருக்கிறார்கள். வருஷ முழுதும் பத்திரிகை வாங்கிப் படித்து விட்டு முடிவில் வி. பி. அனுப்பினால் தேவை இல்லையென்று பலர் திருப்பி விடுகின்றார்கள். அக் கனவான்களை நேரில் கேட்டால் பலபல காரணங்கள் கூறுகின்றார்கள். இவ்வாறு பணம் கொடுக்க முடியாதவர்கள் சொல்லும் காரணங்கள் எள்ளி நகைக்கத்தக்கது. அதை நாம் வெளியிடவும் விரும்பவில்லை.

ஆதி முதல் மித்திரனை அன்புடன் ஆதரித்து, சமயம் நேரும் போதெல்லாம் வேண்டிய உதவிகள் செய்து வரும் கனவான்களும், நண்பர்களும் அநேகருண்டு. இவர்களில் சிலர், இன்னும் பத்திரிகையின் பக்கங்களை அதிகப்படுத்தி மேலான விஷயங்களை அதிகமாய் வெளியிட்டு வந்தால் சந்தாதார்கள் அதிகமாகக் கூடுமென்று சொல்கிறார்கள். சிலர் நாடார்களுக்கு தற்போது தேசிய அபிலாஷை அதிகரித்து வருவதால் அதற்கேற்றவாறு பத்திரிகையின் போக்கு மிருக்குமானால் அதிகமான சந்தாதார்கள் சேரக் கூடுமென்கின்றார்கள். சிலர் பெயரை மாற்றிப் பொதுவான பெயர் கொடுத்தால் மற்றவர்களும் சந்தாதார்களாகக் கூடுமென்றும் சொல்கிறார்கள். இம் மூன்று விதமான யோசனைகளையும் நன்கு கவனித்தோம்.

அதிகமான பக்கங்களுடைய வாரப் பத்திரிகைகள் ஐந்து ரூபாய்ச் சந்தாவுடையனவாக விருக்கின்றன. பாதிக்குமேல் விளம்பரங்கள் தான் நிறைந்து வருகின்றன. நமது பத்திரிகையிலோ இரண்டு பக்கங்களில் விளம்பரங்களும், ஆறு பக்கங்கள் சமாச்சாரங்களடங்கியதோடன்றி சந்தாவும் நாலு ரூபாயாகக் குறைத்தும் விதிக்கப் பட்டிருக்கிறது.

நாடார் சமூக அபிலாஷைக்குத் தக்கவாறும் காலமாறுதலுக்கேற்பவும் விஷயங்களைத் திரட்டி வெளியிடுவதில் தேர்ச்சிபெற்று வந்திருக்கிறோமென்பதை ஆரம்ப முதல் பத்திரிகை படிப்பவர்கள் நன்கறிந்திருக்கக் கூடும். நாடார் சமூகம் விருத்தி யடையவும், திருப்தி யடையவுமான எவ்விதத் தொண்டிலும் நாம் பின்னடையவில்லை. தற்போது தோன்றியிருக்கும் சுயமரியாதை இயக்கத்தில் சரியானபடி ஈடுபட்டிருப்பது "நாடார் குல மித்திரன்" ஒன்றே என்று "குடி அரசு" நற்சாட்சி பகர்ந்திருக்கிறது. "குமரன்" "நவசக்தி" முதலிய பத்திராசிரியர்கள் பலர் நம் மித்திரன் கொள்கையை ஆதரித்திருக்கின்றார்கள். இன்னும் சமூக அபிலாஷைக்கேற்ப நடக்கத் தயாராயிருக்கின்றோம்.

...ப் பெயருடன் பாஷாபிமான தேசாபிமானம் ததும்பிய பேர்கள் நடாத்தும் பத்திரிகை ... தத்தளிக்கின்றன. ...த்தியா பத்திரிகைகள் விழுமியாய்விட்டன. நாடார்குல மித்திரன் நாட்டார் மித்திரன், அல்லது நாட்டு மித்திரன் என்று மாற்றிவிட்டால் மற்றவர்கள் ஆதரிப்பார்களென்று நம்ப முடியாது. ...லோ குலப்பெயரைமாற்றி விட்டதென்று நாடார்களிற் சிலருக்குக் கோபமேற்படலாம். அப்படி இரண்டுங் கெட்ட நிலையேற்பட்டுவிடும். ஆகையால் சந்தாதார்கள் குறைந்ததற்கு மேற் சொன்ன மூன்று காரணங்களுமன்பாதுவாக ஜனங்களுக்குள் 1922-ல் இருந்த உற்சாகம் இப்போதில்லை. கிராமாந்திரங்களில் பொருளாதார நிலைமை சரியில்லை. இன்னும் சில நாட்களுக்குள் எல்லாம் சீர்ப்பட்டு வருமென்று நம்புகின்றோம்.

ஒன்பதாவதாண்டு முதல் பத்து பக்கமாக்கலாமா வென்று யோசனை. இரண்டு பக்கங்களை அதிகப்படுத்துவதில் வருடம் ஒன்றுக்கு அச்சுக் கூலி காகிதச் செலவு ரூபாய் 400-க்கு மேலாகிறது. தற்போதிருக்கும் ஆயிரம் சந்தாதார்கள் நிலைத்திருப்பதாக வைத்துக்கொண்டாலும், ஒருவரே தவறாமல் சந்தாச் செலுத்தினாலும் மொத்த வரவு ரூ...00. இதற்கு 8 பக்கத்தில் 50 வாரத்தில் முடியக் கூடிய ஒரு வருஷத்துக்கு காகிதம், அச்சுக் கூலி தபால் செலவு, குமஸ்தாக் கள் சம்பளம், பிரயாணம், ஸ்டேஷனரி செலவு, கவர் கடு செலவு, கட்டட வாடகை முதலியவகைகளில் ரூபாய் 3975—4—0 ஆகிறது. ஒரு வருஷத்திலோ மொத்த சந்தா வரவு ரூ 3350-ம், விளம்பர வகையில் ரூபாய் 300-ம், ஆக ரூபாய் 3650 தான் வரவு வந்திருக்கிறது. போக 325 ரூபாய் குறைவேற்படுகிறது.

ஆகையால் பக்கங்களை அதிகப்படுத்தினால் வீண் நஷ்டமுண்டாகுமென்று தெரிகிறது. எட்டுப் பக்கங்களுடனே விருத்தியுடன் ...தி வெளியிட்டு வருவதே ...ம் சிலாக்கியமாயிருக்குமென்று நம்புகின்றோம். இன்னும் வாரச் சந்தாதார்கள் அதிகப்படுவனால் மாத மொன்றிரண்டு அனுபந்தங்கள் வெளியிடலாம். நாளடைவில் பக்கங்களை அதிகப்படுத்தவுங்கூடும். ஆகையால் தற்போதுள்ள ஒவ்வொரு சந்தாதாரரும் ஒவ்வொரு புதுச் சந்தாதாரைச் சேர்த்தனுப்ப வேண்டுகின்றோம்.

...து நிருப நேயர்கள் யாவரும் மித்திரன் விர்த்திக்கேற்ப வியாசங்களுமென் மேலும் அனுப்புவதுடன் புதுச் சந்தாதார்களையும் சேர்த்தனுப்புவார்களாக.

...தி வருஷமும் நன்கொடை யளிப்பவர்களும் அன்பர்கள் ஒன்பதாவதாண்டை மறந்துவிடாமல் தத்தம்மியன்றளவு நன்கொடையளித்து மித்திரன் பொக்கிஷத்தை நிரப்புவார்களாக.

...து ஜாதிக்கும், நமது நாட்டிற்கும் இன்னும் மேலான ஊழியஞ்செய்ய சர்வ சக்தியும் தந்தருளுமாறு எல்லாம்வல்ல ஈசனைத் துதித்து இவ்வாண்டின் கடமையை ஏற்று நடத்துகின்றோம்.

## குறிப்புகள்.

### மதுரை முனிஸிபல் எலெக்ஷன்.

24—8—27-ல் நடைபெற விருக்கும் மதுரை முனிஸிபல் 14-வது வார்டு கௌன்ஸிலர் ஸ்தானங்களிலொன்றின் எலெக்ஷனுக்கு ஸ்ரீமான் கே. முத்துக்குமாரு நாடாரவர்களும், கா. ம. அலாவுதீன் ராவுத்தரவர்களும் அபேக்ஷகராக முன் வந்திருப்பதாக அறிகிறோம். மேற்படி வார்டு வாக்காளர் ஜாபிதாவைப் பார்ப்போமாயின் சரிபாதி வாக்காளர்கள் நாடார்களாகவே இருப்பது கொண்டு அந்த ஸ்தானம் நம்மவர்க்கே உரித்தானதென்பதில் ஐயமில்லை. என்றாலும் சமீபகாலமாக ஜனாப் அலாவுதீன் ராவுத்தரவர்களே, நம்மவர்க்கும் அவர்களுக்கு முள்ள ஐக்கிய பாவத்தால் சகாதாவு பெற்று அதில் ஸ்தானம் வகித்து வந்தார்கள். வகித்து வந்ததில் அவர் நாடார்களுக்கு நன்மைகள் ஏது செய்துள்ளாரென்றெழும் கேள்விக்குத் தக்க ஆதாரம் சொல்லவமென்பதில் துணிவு கொண்டாலும் தீமை யொருக்காலும் செய்திரார் என்பதுறுதிப்பாடாம். அவ்வழியில் ஜனாப் இராவுத்தரவர்களுக்கு நாடார் பெருமக்கள் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவர்களேயாவர். என்றாலும் முறைமைப்பட்டவர் முன்வரும் போது ஜனாப் இராவுத்தரவர்கள் உள்பட நாடார் பெருமக்கள் நாடாரொருவருக்கே தங்கள் வாக்கைக் கொடுப்பதில் சித்தமையும், கடமையும் பட்டவர்களென்பதில் பேதமின்று. இதுவே நமக்குள்ள ஐக்கியத்தையும், ஒற்றுமையையும் பலப்படுத்துவதுடன் கண்ணியமுமான காரியமாகும். ஆகவே முக்கியமாய் நாடார்குல ஓட்டர்களனைவரும், மற்றும் 14-வது வார்டு ஓட்டர்களனைவரும் ஸ்ரீமான் முத்துக்குமாரு நாடாரவர்களுக்கே தங்கள் தங்கள் வாக்கைக் கொடுத்துதவுமாறு வேண்டுகின்றோம்.

### நன்கொடை.

விருதுநகர் ஸ்ரீமான் கா. செந்தி நாடாரவர்கள் தனது திருக்குமாரரின் திருக்கல்யாண வைபவத்தை முன்னிட்டு நமது மித்திரனையும் கண்ணியப்படுத்த ரூபாய் மூன்று நன்கொடையாக அனுப்பியுள்ளார்கள். அதைசந்தோஷத்தோடேற்று, தங்கள் சுப காரியத்தில் மித்திரனை பொருட்படுத்திக் கொண்ட பெருந்தகைமை குறித்து அகமகிழ்ந்து நமது வணக்கமான வந்தனத்தைச் செலுத்துகின்றோம்.

### பகற் கொள்ளை.

கொழும்பில் 28-7-27 பகல் சுமார் 2-மணிக்கு செட்டிதெருவிலிருந்து சமது குல சிகாமணியான ஸ்ரீமான் பலபிட்டியா யோசேப்பு நாடாரவர்கள் ரூபாய் 45 பெறுமான சிகரட் டின் டஜன் 2 ஐயும் மணிபாக்ஸ் 1 சட்டைப் பையிலும் வைத்துக்கொண்டு 4-ம் குறுக்குத்தெரு வழியாய் வரும் பாதையில் ஷை தெருவில் இலங்கை வாசிகளான 7 பேர்கள் ஒன்று கூடி திடீரென்று இவரின் பையிலிருந்த மணிபாக்ஸை எடுக்க இவர் திரும்பி ஷை பேர்களைப் பிடிக்க அவர்கள் இவரை அடிக்க சுமார் 10 நிமிஷம்மட்டும் குழப்பமாய் இருந்தது. கூட்டமோ மிகவும் ஏராளம். கடைசியாய் மணிபாக்ஸ் பறிபோனதுமல்லாமல் சிகரட்டிலும் ஒரு டஜன் மட்டுந்தான் கிடைத்ததாம். இதைக் கண்டு போலீஸார்கள் ஷை நபர்களில் 4-பேர்களை பிடித்திருக்கிறதாகவும் மீதியானமூன்றுபேரையும் பிடிக்கக் கூடிய சீக்கிரம் புறக்கோட்டை போலீஸ் விசாரணைக்கு வரப்போவதாகவும் தெரிகிறது என்று ஸ்ரீமான் வெ. பெ. மாசனமுத்துநாடார் எழுதுகிறார்.

## பார்ப்பனரின் சாமர்த்தியம்.

பார்ப்பனர் என்று சொன்ன உடனேயே பிராமணர்களைத் திட்ட ஆரம்பித்து விட்டதாக சிலர் நினைத்து விடுகின்றனர். இது முற்றிலும் தவறு. பிராமணர், க்ஷத்திரியர், வைசியர் என்ற வார்த்தைகளெல்லாம் சமஸ்கிருத வார்த்தைகளே. அவற்றிற்கு முறையே பார்ப்பனர், சான்றோர், வணிகர் என்பதே சரியான தமிழ்வார்த்தைகளாகும். ஆதலால் பார்ப்பனர் என அழைப்பதற்காக யாரும் வருந்த வேண்டியதில்லை.

இந்தியாவில் ஜாதிப்பிரிவினைகள் ஏற்பட்டது இன்று நேற்றல்ல. ஆதியில் அதாவது ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் ஒவ்வொருவருக்கும் ஒரு சில குறிப்பிட்ட தொழில்களை ஏற்படுத்தி பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்று நான்கு ஜாதிகளாக வகுக்கப்பட்டது. அதே நான்கு ஜாதிகள் இது சமயம் இந்தியாவில் ஆயிரக்கணக்கான ஜாதிகளாகப் பெருகி விட்டன. ஜனத்தொகை பெருக வேற்றுமைகளும் பிரிவினைகளும் பெருகிக்கொண்டு வருவது சகஜமேயாகும். ஆனால் எவ்வளவு பெருகியிருந்தாலும் ஜாதிப் பிரிவினைகள் எவ்வளவு அதிகப்பட்டிருந்தாலும் பிராமணர் என்ற நமது பார்ப்பனர் மற்றெல்லா ஜாதியாரையும் விட—உயர்ந்தவர்கள் முதன்மையானவர்கள் என்பதில் மாத்திரம் ஆதியிலிருந்து எப்பொழுதும் எவ்வித மாறுதலும் ஏற்படாமலேயிருந்து வந்திருக்கின்றனர். இது ஒரு பெரிய ஆச்சரியமேயல்லவா?

பிராமணர்கள் முற்காலத்திலும் சரி தற்காலத்திலும் சரி மற்ற சாதாரண ஜனங்களைப்போல கஷ்ட ஜீவனம் செய்து பிழைத்ததாகத் தெரியவேயில்லை. அதற்கு காரணம் என்னவென்றால் அவர்கள் காலத்திற்குத் தக்க வேடம் போடுவதில் மிகுந்த சமர்த்தர்களாய் இருந்து வருகின்றனர். இதனுண்மையை பின்வரும் உதாரணங்களால் யாரும் எளிதில் அறிந்து கொள்ளலாம்.

காலமாறுபாட்டினாலே இந்தியாவானது ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்குள் அடங்கிக்கிடக்கின்றது. அவர்கள் இந்தியாவுக்கு முற்றிலும் அந்நியர்கள் ஆனபோதிலும் அவர்களிடத்திலும் நமது பார்ப்பனர் நெருங்கிப் பழகி அவர்கள் பெயரைச் சொல்லி காலக்கிரமத்தில் சகல அதிகாரங்களையும் தாங்களே நடத்திவருவது ஆச்சரியமேயல்லவா? சர்க்காரிடத்தில் அவர்களுக்கிருக்கும் செல்வாக்கு அந்தஸ்து; வேறு எந்த ஜாதியினருக்கிருக்கின்றது? ஒருவருக்குமில்லையே! இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதியாக தென் ஆப்பிரிக்காவில் அதிகாரம் செலுத்துவது யார்? ஆஸ்திரேலியாவின் புதுத் தலைநகரம் திறக்கப் படுகையில் இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதியாகச் சென்றது யார்? இப்பொழுது ஜினிவாவில் நடக்கும் மகாநாட்டிற்குச் சென்றிருப்பது யார்? எல்லாம் பிராமணர்களேயன்றோ?

உலகத்தில் ஏதேனும் புதிதாக ஒரு மாறுதல் ஏற்படுவதாயிருந்தால் அதை முதலாவதாக பிராமணர்களே கையாள ஆரம்பித்து விடுகின்றனர். இதனாலேயே அவர்கள் எக்காலத்திலும் செல்வாக்குடனிருந்து வருகின்றனர்.

இந்தியாவில் ஆங்கில ராட்சி ஏற்பட்டவுடனே ஆங்கில பாஷை அறிய வேண்டிய அவசியத்தை உணர்ந்து அதைக்கற்க ஆரம்பித்து அதனால் சகல நன்மைகளும் அடைந்து வருவது பிராமணர்களேயன்றோ? இப்பொழுதும் ஜனக்கணிதைக்குறிப்பின்படி எல்லா ஜாதியையும்விட பிராமணர்களிலேயே ஆங்கிலக்கல்வி கற்றோர் அதிகமிருக்கின்றனர். அரசாங்கத்தில் என்னென்ன உத்தியோகங்களுண்டோ அவைகளிலெல்லாம் நுழைந்துவிட்டனர்.

இதைக்கண்ட மற்றையோர் தாங்களும் நன்மைகளடையக் கருதி ஆங்கிலங்கற்க ஆரம்பித்தனர். அதன் பயனாக இப்பொழுது நாட்டில் நாளுக்குநாள் ஆங்கிலப்பட்டதாரிகள் பெருகிவிட்டனர். அதற்குத்தக்கபடி அரசாங்க உத்தியோகங்களும் விரிந்து கொண்டே போகின்றன. எவ்வளவுதான் விரிந்தபோதிலும் வேலையில்லாத்திண்டாட்டம் அதிகப்பட்டுக் கொண்டே வருகிறது. இதை அறிந்த பிராமணர்களுக்கு அரசாங்க உத்தியோகத்தில் வெறுப்பு உண்டாக ஆரம்பித்துவிட்டது. இது சகஜம் தானே.

அதற்கேதுவாக நாட்டில் தோன்றிய சுயராஜ்யக் கிளர்ச்சியில் பிராமணர்கள் வந்து புக ஆரம்பித்துவிட்டனர். அரசாங்கத்தை அண்டி எப்படி பெரிய அதிகாரங்களை அடைந்தார்களோ அப்படியே இவ்வியக்கத்திலும் சேர்ந்துசிறிது காலத்தில் பெரும் பெரும் தலைவர்களாகவே கிளம்பிவிட்டனர். இம்மாதிரியாக எங்கே சென்றாலும் உன்னத ஸ்தானங்களிலேயே அவர்கள் நின்று கொள்கின்றனர்.

இந்தியாவின் பொது பாஷைபாக ஹிந்தியை ஏற்படுத்த வேண்டுமென்று இப்பொழுது பேசப்பட்டுவருகிறது. அவ்வளவுதான் தாமதம்! பிராமணர்கள் உடனே ஹிந்திகற்க ஆரம்பித்துவிட்டனர். மற்றவர்களுக்கு ஹிந்தி போதிக்கக்கூடிய நிலைமைக்கும் வந்துவிட்டனர். ஆனால் மற்றவர்களோ ஆங்கிலங்கற்பதில் இப்பொழுது அதிக மோகங்கொண்டு நிற்கிறோம். ஐம்பது அல்லது நூறுவருடங்களுக்குப் பின்னால் தெய்வச் செயலால் ஆங்கில ராட்சி ஒழிந்து சுயராஜ்யம் பெறுவதாகவும் ஹிந்தியே இந்தியாவின் பொது பாஷையாகிவிட்டதாகவும் வைத்துக்கொண்டால் அப்பொழுதும் இப்பிராமணர்களே நமக்கு ஹிந்திகற்றுக் கொடுக்கும் ஆசாரியர்களாய் விளங்குவார்கள் என்பதில் ஏதேனும் சந்தேகமுண்டா? இப்படியே எதை எடுத்துக் கொண்டாலும் அவர்கள் முன்னெச்சரிக்கையாக சாமர்த்தியமாகச் செய்யும்காரியங்களைச் சாமான்யமாகச் சொல்லமுடியாது. அவர்கள் ஒரு காரியத்தைப் புதிதாக ஆரம்பித்து எல்லா நன்மைகளையும் அனுபவித்த பிறகே நாம் அதைப்பெற ஆவல் கொள்ள ஆரம்பிக்கின்றோம். அதற்குள் அவர்களும் என்னென்ன சூட்சிகள் அதில் செய்ய வேண்டுமோ அவைகளையெல்லாம் செய்து முடித்து விடுகின்றனர்.

அம்மாதிரி அவர்கள் இதற்குமுன் செய்துள்ள சூட்சிகளைப்பற்றி பின்னால் விவரிப்பாம்....

P. E. P. நாடார்.

## தூத்துக்குடி.

(நமது நிருபரிடமிருந்து.)

13-8-27 மாலை 3-மணிக்கு சென்னைமாகாண முதன் மந்திரி கனம் டாக்டர்சுப்பராயன் அவர்கள் இவ்விடம் விஜயம் செய்தார்கள். இந்திய வியாபாரச் சங்கத்தின் ஆதரவில் அன்று ஒரு கூட்டம் கூடி மந்திரியவர்களுக்கு உபசாரப் பத்திரமொன்று வாசித்தளித்தனர். இதற்குப் பதிலுரையாக இங்கு வரவேற்று இந்த உபசாரப்பத்திரத்தை அளித்ததற்காக வந்தனம் செலுத்துவதாகவும், துறைமுகச்சபை, நகரசபை, தாலுகா, ஜில்லா சபைகளில் இச்சபைக்குப் பிரதிநிதித்துவம் வழங்குவது கவர்ன்மெண்டாரைப் பொறுத்திருப்பதால் அவ்விஷயமாய்த் தனக்கு ஒன்றும் செய்வதற்கில்லையென்றும், தூத்துக்குடி துறைமுக விஷயமும் கனம் சி. பி. ராமசாமி அய்யர் நிர்வாகத்திட்டபட்டதாகையால் அதில்தான் எதுவும் செய்ய இயலவில்லையென்றும் ஆனால் சங்கத்தார் கேட்டுக்கொண்டபடி இந்நகரசபையில் பிரதிநிதித்துவம் கொடுக்கும் விஷயமாய் தன்னால் கூடுமானதைச் செய்வதாகவும் கனம் மந்திரியவர்கள் பேசிமுடித்தார். அப்பால் சங்கத்தின் பிரஸிடெண்ட் அவர்களால் கனம் மந்திரியவர்களுக்கு வந்தனோபசாரம்சொல்லப் பெற்று, வந்திருந்தவர்களுக்குத் தாம்பூலம் சந்தனம் வழங்கப்பெற்று கூட்டம் கலைந்தது.

## சர்வ வருண சமரச விளக்கம்.

இப்பாரத தேசத்திய முன்னேற்றத்தில் உழைத்துவரும் இந்து சகோதர சகோதரிகளே! "பிரித்து ஆள்" என்பது உரோமர்களின் பழமொழி. இவ்வாயுதத்தைக் கைக்கொண்டுதான் பிறநாட்டார் ஏனைய நாட்டினரைப் பல கட்சியாய்ப் பிரித்து ஜனநாயக ஒற்றுமையை யழித்து பயமற்று ஆளுவது வழக்கம். அவ்வண்ணமே ஆதியில் பிராமணரெனுமவருள் சுயநலங்கருதிய ஓர் கட்சியினர் ஜனநாயக ஒற்றுமையைக் குலைத்து, தாங்கள்மேன்மையையும், உயர்வையுமடைந்து, மற்றெல்லோரையும் அஞ்ஞானக் கடலில் அமிழ்த்தி விட்டனராதலால்,

1. இயற்கைத் தருமத்துக்கும், கடவுளின் திரந்தர கட்டளைகளுக்கும், உங்கள் இருதயத்துக்கும் நீங்கள் உண்மையுள்ளவர்களாக வேண்டுமெனின் கூடாஜாதிக் கட்டுப்பாடுகளை உதறிவிடுங்கள்.

2. பொய்கள் என்ற அணுக்களால் புனைந்த வருணாசிரமமென்கிற அதர்மக் கொள்கையைக் குலைத்துவிட்டு நீங்கள் இன்னஜாதியாரென்பதைக் கனவிலும் நினையாமலும், எவருக்குஞ் சொல்லாமலும், சுயமரியாதையைக் காப்பாற்றுங்கள்.

3. இந்து தேசமக்கள், அல்லது பாரதமாதாவின் புத்திரரென்ற உண்மைப் பெயரை எல்லோரும் பாராட்டுங்கள்! நிலை நாட்டுங்கள்! கண்ணீர் மல்கிப் பாடுங்கள்! அகங்கரைந்து ஆடுங்கள்!

4. ஐயர், செட்டி, நாயுடு, முதலி, கவுண்டர், பிள்ளை, ரெட்டி, சர்மா, ராவ், குப்தா, தாஸர் என்றவை போன்ற பட்டங்களைப் பாராட்டாதீர்கள். பரதகண்டத்தில் பிறந்தவராதலால் பாரதி என்ற கௌரவப் பட்டத்தை அணியுங்கள். (ஜாதிகள் பிறந்தவிடம் மறைந்துவிடும்)

5. உலகிலுள்ள ஜனத்தொகை மொத்தத்தில் பாதிப்பங்கு புருஷரும், மற்றைப்பாதி கூட்டத்தினர் ஸ்திரீகளுமாவார்கள். ஜாதி என்கிற மாயப் பிசாசத்துக் கடிமைப்பட்டு பாதி கூட்டத்தினராகிய ஸ்திரீகளுக்குச் சம உரிமையையும், எல்லோரிடத்துஞ் சகோதர பாவத்தையும், சமரசத்தையும் காட்டாதவரையில் சமதர்ம ராஜ்ஜியமும், பரலோகப் பிராப்தியும், பொய்க்கனவேயாகும்.

6. பிறர் எவ்வண்ணம் நடந்தால், உங்களுக்கிதமாயிருக்குமோ அவ்வண்ணம் நீங்கள் பிறருக்கு இதைச் செய்யாவிடின் உங்களுக்குப் பரிசுத்த இருதயமில்லையென்பதை வெள்ளிடைமலைபோல் விளக்கிவிடும். இவ்விதி எக்கணமும் மறக்காமல் கவனத்தில் வைக்கத்தக்கது.

7. 'தெய்வம் ஒன்றே' என்னும் தத்துவத்தைக் கடைப்பிடியாவிடின் நரகப்பிராப்தியைத்தவிர ஒன்றுஞ் சித்தியாது.

8. சுகாதார சாஸ்திரத்துக்கு மாறுபடாமல் சுசியாய் தன் இஷ்டத்துக்கேற்ற உணவை, எவர் பாகஞ்செய்து கொடுத்தாலும், ஜாதி வித்தியாசத்தைப் பாராட்டாது அருந்துவதில் ஒரு தீங்குமில்லை. ஸ்ரீ கிருஷ்ணன் விதுரன் அன்னத்தை தேடிச் சென்று அருந்தினர். ஸ்ரீ ராமர் சபரி கையால் அமுதுசெய்தார்.

9. பொய்ச் சடங்குகளும், பகட்டும் மந்திரங்களும் பயன்படா, உற்றார், உறவினர், நண்பர்களெல்லோரும் உருகிய மனதோடு பஜனை, ஆடல் பாடலால் கடவுளைத் தியானித்து, திருத்தாலி பூட்டலாம். செய்யுஞ் சடங்கு களெவற்றையுஞ் செய்யலாம். கூடியுண்ணுங்கள்; ஏழைகளைத் திருப்திசெயயுங்கள்.

10. சுயநலத்தையே பெரிதாய்க் கருதிய ஓர் அதர்மக் கூட்டத்தினர் மந்திர தந்திரங்களால் ஏவிவிட்ட வருணப்பிசாசத்தைச் சங்காரஞ் செய்யும் பொருட்டு நம்மையாளும் ஈசுவரன் அருளால் சென்னையில் ஸ்தாபிக்கப்பெற்ற Sir T. சதாசிவய்யர் Kt. அவர்களைத் தலைமை கொண்ட "இந்து சமுதாய சீர்திருத்த சபை" முன்னேறிச் செல்லுமாறு நாம் கடவுளை உள்ளன்போடு தொழுவோமாக.

கருணையே வடிவுகொண்ட

எல்லாம் வல்ல இறைவா!

அஞ்ஞானக்கடலில் அழுந்திக்கிடக்கும் வீழ்குடி மக்களாகிய எங்கள் நாட்டவரிடத்தில் இரங்கி அருள்க! தேவரீரே மானிடராகிய எங்களுக்கு பரம பிதாவாகையால் நாங்களனைவரும் உடன்பிறந்தோரென்ற உண்மை ஞானத்தை எங்களுக்கு அருளாய் புகட்டுக!

எங்கள் நாட்டுப்பலகோடி மக்களும் ஒரே சமூகக்கொள்கைக்குக் கட்டுப்பட்டு உண்மைத் தோழர்களாய் உள்ளம் ஒன்றி வருணமென்கிற ஜாதிப் பிசாசத்திற்கு அடிமைப்படாது, எங்கள் தாய்நாடு விடுதலைபெற வேண்டிச் சுயேச்சை, சுயமரியாதை, மெய்யறிவு, நலவொழுக்கமென்கிற சத்திய மார்க்கத்தில் நாங்கள் முன்னேறிச் செல்லுமாறு உமது குழந்தைகளாகிய எங்களுக்குத் திருவருள் புரிவீராக! ஓம்! சுபம்!

"சர்வ வருணசமரச விளக்கம்" என்ற நூல் சுருதி, ஸ்மிருதி, புராண மேற்கோள்களுடன் எல்லோரும் உணருமாறு எளிய நடையில் எழுதி அச்சுக்குப் போகும் தருவாயிலிருக்கிறது. புத்தகம் வேண்டுவோர் ரூபாய் ஒன்று வீதம் முன் பணம் அனுப்பினால் புத்தகங்கள் அனுப்பப்படும்.

C. P. இராஜகோபாலன்,
திருச்சிராப்பள்ளி.

## பால்ய நாடார் சங்கம் விருதுநகர்.

மேற்படி சங்கத்தின் நான்காவது கூட்டமானது நளது பிரபவ வருடம் ஆடி ௴ 29 ௳ (13—8—27) சனிக்கிழமை மாலை 7-30 மணிக்கு மாலைக் கோவில் பள்ளிக்கூடத்தில் ஸ்ரீமான் காமராஜ நாடார் அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது.

வழக்கம்போல் கடவுள் வாழ்த்துப் பாடிய பின் நண்பர் பெ. இரத்தினசாமி யென்பவர் "தீண்டாமை" என்னும் விஷயத்தைப் பின் கண்டவாறு பேசினார். 'தீண்டாமையானது இந்தியரைப் பாழ்படுத்தும் கெட்ட வழக்கமென்றும், கடவுள் சிருஷ்டியில் எல்லோரும் சகோதரர்களென்றும், ஆனால் வாய் மதத்தாலும், திரேக பலத்தாலும் ஏழைகளைச் சிலர் ஒடுக்கி வைத்திருக்கிறார்களென்றும், அப்படி ஒடுக்கி வைத்திருப்பதால் தான் ஒவ்வொரு வருடமும் லக்ஷக்கணக்கான இந்தியரின் மத மாறுதலுக் கொரு காரணமாயிருக்கிறதென்றும், ஆதலின் நாம் இந்தியாவையும், இந்து மதத்தையும் பாதுகாக்க வேண்டுமானால் தீண்டாமை ஒழித்தல் அவசியமென்று சொல்லி முடித்தார். பின்னர் அதே விஷயத்தைப்பற்றி பல நண்பர்கள் பேசினர். அக்கிராசனர் முடிவுரையாக தீண்டாமையானது இந்தியருக்குள் அநேக வித்தியாசங்களை உண்டாக்கி உயர்வு, தாழ்வு என்கிற கர்வத்தைக் கொடுத்து அந்நியருக்கு அடிமைப் படுத்தி வைக்கும் சங்கிலி யென்றும், அதை ஒழித்தால் தான் நாம் முன்னேற முடியுமென்றும், ஆதலால் நாம் தீண்டாமையை விலக்குவதற்கு பாடுபடுதல் அவசியமென்றும், தீண்டாமை விலக்கல் ஏட்டிலேயே இன்னும் இருந்து வருகிறதென்றும், ஏட்டில் எழுதி வைத்தும் பிரசங்கங்களில சொல்லிக் கொண்டும் உருவான திட்டம் செய்யாவிடில் பிரயோசனமில்லை யென்றும், காரியத்தில் செய்து காண்பிக்க வேண்டுமென்றும் சொல்லி முடித்தார்.

பின்னர் நாடார் மகாஜன சங்கத்தாரத்தை ஆதரித்து ஒரு பொதுக் கூட்டம் நடத்த கீழ் கண்ட ஐந்து பேர் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். ஸ்ரீமான்களான (1) பி. பழனிச்சாமி நாடார், (2) எஸ். கந்தசாமி நாடார், (3) ப. வே. ச. பழனிச்சாமி, (4) பெ. இரத்தினசாமி, (5) பு. துரைப்பாண்டியன். வந்தனோபசாரத்துடன் 9-30 மணிக்கு முடிந்தது என்று நண்பர் ஏம். அருணகிரி எழுதுகிறார்.

## மகாத்மாவும், வருணாச்சிரமமும்.

மகாத்மா காந்தி "தீண்டாமை ஒழிய வேண்டும், மதத்திலும் சமூகத்திலும் சீர்திருத்தம் ஏற்பட வேண்டும்" என்கிற கொள்கை உடையவர் என்று ஜனங்கள் நம்பி வந்தாலும், அவரது எண்ணத்திலும் பேச்சிலும் அதற்கு நேர் விரோதமான கொள்கையை உடையவராகவே காணப்படுகிறார். இம்மாதிரி எண்ணத்தோடும் பேச்சுகளோடும் மகாத்மா காந்தியின் பிரசாரம் நடைபெற தீண்டாமையும் மூடக் கொள்கைகளும் நாட்டில் வலிமையோடு நிலைபெற இடம் ஏற்படுமே அல்லாமல் ஒருக்காலும் இவை ஒழிக்கப்படவே முடியாது. எந்த தீண்டாமையை ஒழிக்க வேண்டுமென்று வெளிப்படையாய்ப்பேசுகிறாரோ,அதே தீண்டாமையை நிலை நிறுத்த அதே பேச்சை வியாக்கியானம் செய்வதில் பாடுபடுகிறார்.

இதைப்பற்றி முன் ஒரு தடவை கூட எழுதி இருக்கிறோம்.

உண்மையான தீண்டாமையை நமது நாட்டை விட்டு வெளிப்படுத்த வேண்டுமானால் மகாத்மா காந்தியையும் எதிர்த்துப் போராடித்தான் தீர வேண்டியதிருக்கிறது.

தீண்டாமை இன்னது என்பது மகாத்மாவுக்கு இன்னமும் சரியாய்ப் புலப்பட இல்லை என்பதே நமது அபிப்பிராயம். அவர் மதத்தின் பெயரைச் சொல்லிக் கொள்வதனால் பொது ஜனங்களிடம் உண்டாகக் கூடிய செல்வாக்கையும் உபயோகப்படுத்திக் கொள்ள நினைப்பதால் உண்மைத் தீண்டாமைத் தத்துவம் அவருக்கு புலப்பட மார்க்கமில்லாமல் போய்விடுகிறது. ஆதலால், மகாத்மாவினது தீண்டாமை விலக்கு கொள்கையைப் பின் பற்றுவோமானால் மறுபடி தீண்டாமைச் சேற்றிலே சறுக்கி விழுக வேண்டிவரும் என்றே நாம் பயப்படுகிறோம். வெகு காலம் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தும், மூடி மூடி வைத்தும் கூட உண்மையான தீண்டாமை விலக்கையும் சுயமரியாதையையும் உத்தேசித்து வெளிப்படையாய் இப்போது அவரைத் தாக்கித் தீர வேண்டியதாய் ஏற்பட்டுவிட்டதற்கு வருந்துகிறோம்.

ஏனென்றால் சமீபத்தில் தமிழ் நாட்டிற்கு மகாத்மா காந்தி வரப்போகிறார். தீண்டாமையைப்பற்றி பேசும்போது அவரது வழக்கப்படியே தான் பேசித் தீருவார். அதன் மூலம் நமது எதிரிகளுக்கு அதிகமான பலம் ஏற்பட்டு நமது முயற்சியை ஒழிக்க அதை அவர்கள் உபயோகித்துக் கொள்வார்கள். ஆதலால் அதை இப்போதே நாம் வெளிப்படுத்திவிடுவது மேலானதென்றே கருதுகிறோம். அதாவது, மகாத்மா காந்தி நமது பார்ப்பனர்கள் சொல்லுவது போலவே நமது சமூக வாழ்வில் வருணாச்சிரம தர்மம் உண்டு என்றும், அது பிறவியிலேயே ஏற்பட்டது என்றும் அடிக்கடி சொல்லி வருகிறார். சமீபத்தில் மைசூரில் ஒரு கூட்டத்தில் தீண்டாமையைப்பற்றிப்பேசும்போதும், இந்து சமூகத்தில் வருணாச்சிரம தர்மம் உண்டு என்றும், அது நமது சமூகத்திற்கு அவசியம் என்றும், ஒவ்வொரு வர்ணத்தாருக்கும் ஒவ்வொரு தர்மம் விதிக்கப்பட்டிருக்கிறதென்றும், அந்தந்த வர்ணத்தார் அந்தந்த தர்மத்தைச் செய்யும்போது அவரவர்கள் அம்மட்டில் உயர்ந்தவர்கள் என்றும், பிராமணன் அவன் தர்மத்தைச் செய்யும்போது உயர்ந்தவனாகிறது போலவே மற்ற வருணத்தானும் அவனவன் தர்மத்தைச் செய்யும்போது தான் உயர்ந்தவனாகிறான் என்பதாகவும் பேசியிருக்கிறார். இதைத்தான் பார்ப்பனர்களும் தாங்கள் பிறவியிலேயே உயர்ந்தவர்கள் என்பதற்குக் காரணங்களாகச் சொல்லிவருகிறார்கள்.

வருணாச்சிரம தர்மத்தின் மூலமாகத் தான் நமது நாட்டில் தீண்டாமைக் கொள்கை அமுலில் இருந்துவருகிறதே ஒழிய வருணாச்சிரமம் இல்லாவிட்டால் தீண்டாமைக் கொள்கை பரவமார்க்கமே கிடையாது. வருணாச்சிரம தர்மம் என்கிற ஒரு உடல் இல்லாவிட்டால் தீண்டாமை யென்கிற உயிருக்கு ஆட்டம் இல்லை. யோசித்துப் பார்த்தால் இந்தக் கொள்கை தத்துவம் எவருக்கும் விளங்காமல் போகாது. அந்தந்த வருணத்தானுக்கு ஏற்பட்ட தர்மப்படி அவனவன் நடக்க வேண்டும் என்று மகாத்மா சொல்லுவதைத்தான் தூவார் மகாநாடு "பிராமண சம்மேளன" மும் ஏக மனதாய் தீர்மானம் செய்திருக்கிறது.

மகாத்மா சொல்லும் வருணாச்சிரம தர்மம் அதுவல்ல என்பதற்கு வேறு ஆதாரம் என்ன? மகாத்மாவும் வருணாச்சிரமம் நான்கு என்று சொல்லுகிறார். அதாவது, பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என்கிறார். தூவார் பிராமணச் சம்மேளனத்தாரும் மகாத்மா சொல்லும் ஆதாரத்தைக் கொண்டே, க்ஷத்திரியனும் வைசியனும் உலகத்தில் இப்போது காணப்படவில்லை. ஆதலால் பிராமணன், சூத்திரன் ஆகிய இரண்டு வருணத்தார் மாத்திரம் தான் இருக்கிறார்கள் என்கிறார்கள். மறைந்துவிட்ட இரண்டுவருணத்தாரைப்பற்றி நமக்குக் கவலை இல்லை. இருக்கிற இரண்டு வருணத்தாரைப் பற்றியவரையிலாவது இவர்களுக்கு "மகாத்மா" கற்பிக்கும் தர்மங்கள் என்ன என்பது தான் நமது கேள்வி. வருணாச்சிரமத்தையும், அதன் மர்மத்தையும் ஒப்புக்கொள்ளுகிற ஒருவர்—அதுவும் வருணாச்சிரமமும், அதனதன் தர்மமும் மக்களுக்கு பிறவியிலேயே உண்டு என்று ஒப்புக்கொள்ளுகிற ஒருவர், தீண்டாமை இல்லை என்று எப்படிச் சொல்ல முடியும்? மகாத்மா கூறும் வருணாச்சிரமத்திற்குப் பார்ப்பனர் கூறும் தர்மத்தை விட வேறு ஏதாவது தர்மம் கற்பிக்க ஆதாரம் இருக்கிறதா என்று பார்த்தால் நாளது வரை மகாத்மா அது வேறு என்று சொன்னதாகவே தெரியவில்லை. மைசூர் உபந்நியாசத்தில் ஜன சேவையே பிராமணர்களுடைய தர்மம் என்று சொல்லி இருக்கிறார். அதுபோலவே பிராமண சேவையே சூத்திரனுடைய தர்மம் என்று தான் அவர் சொல்லி ஆக வேண்டும். பொது ஜன சேவைதான் பிராமண தர்மம் என்று சொன்ன சாஸ்திரங்களில் தான் "பிராமண சேவையே சூத்திர தர்மம்" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

பிராமணருக்குப் பொது ஜனசேவை செய்வதினால மாத்திரம் உயர்வு உண்டாகுமானால சூத்திரனுக்கு பிராமண சேவை செய்வதினால் மாத்திரம் தான் உயர்வு உண்டாகுமேயன்றி அதை விட்டு வேறு வேலை செய்வானானால் சூத்திரன் கண்டிப்பாய்த் தாழ்ந்தவனாகிறான் என்று தான் மகாத்மாவின் தத்துவத்திற்குப் பொருள் ஏற்படுகிறது. இந்தப்படியானால் எந்த விதத்தில் பிராமணனுக்கு சம அந்தஸ்தாக சூத்திரன் இருக்க முடியும் என்று மகாத்மா கருதுகிறார் என்பது நமக்கு விளங்கவில்லை.

அன்றியும் "அந்தந்த வருணத்தார் அந்தந்த தருமத்தைச் செய்து வருகையில் ஒருவருக்கொருவர் உயர்வு தாழ்வு சொல்லிக்கொள்ள இடமேது." என்றும் பேசி இருக்கிறார். அப்படியானால், அந்தந்த வருணத்தாருக்குத் தனித்தனி தர்மம் ஏற்பட வேண்டிய அவசியம் என்ன என்பதைப் பற்றியாவது ஒரு வருணத்தான் மற்ற வருணத்தானுடைய தர்மத்தைச் செய்வதானால் கெடுதி என்ன என்பதைப்பற்றி யாவது ஒரு வார்த்தையாவது இது வரை மகாத்மா சொன்னதே யில்லை. "பொது ஜன சேவை என்பது பிராமணர்களுக்கு மாத்திரம் சொந்தமானது; அதற்காகவே அவர்கள் பிறந்திருக்கிறார்கள் என்றும் மகாத்மா சொல்லுவாரானால் மகாத்மா அவர்கள் நான்கு வருணத்தில், தான் எந்த வருணத்தைச் சேர்ந்தவர் என்று சொல்ல முடியும்? மகாத்மா சொல்லுகிற கொள்கைப்படி பார்த்தால் அவர் பிறவியில் ஒன்று சூத்திரராயிருக்க வேண்டும், அல்லது வைசியராயிருக்க வேண்டும். எனவே சூத்திரனுக்கும் வைசியனுக்கும் ஏற்பட்ட தர்மத்தைச் செய்வதை விட்டு விட்டு பிராமணனுக்கு ஏற்பட்ட தர்மமாகிய பொது ஜன சேவையைச்செய்வதற்கு மகாத்மாவுக்கு உரிமையேது? தன்னாலேயே நடத்திக் காண்பிக்க முடியாத வருணாசிரம தர்மத்தை மற்றவர்களை ஏற்று நடத்தும்படி சொல்வதில் ஏதாவது பொருளுண்டா? இவைகளைப்பற்றி இவ்வளவு தூரம் எழுதினது தீண்டாமை விஷயத்தில் மகாத்மாவுக்கு உள்ள குழப்பத்தைக் காண்பிக்கவும், அவரும் குருட்டு நம்பிக்கையில் ஈடுபட்டவரே அல்லாமல் பகுத்தறிவுக்கு மதிப்புக் கொடுப்பவராகப் புலப்படவில்லை என்பதையும் காட்டுவதற்குமே எழுதுகிறோமே அல்லாமல் அவர் மீது குறை கூறுவதற்காக அல்ல. அன்றியும் மகாத்மா நாட்டிற்கும், மக்களுக்கும் செய்திருக்கும் அநேக நன்மைகளைப்பற்றி நமக்கும் மகாத்மாவின் அந்தரங்க சிஷ்யர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கட்கும் யாதொரு வித்தியாசமும் இல்லை. எனினும் இத்தீண்டாமை விஷயத்திலும், வருணாச்சிரம விஷயத்திலும் மகாத்மாவுக்கு தெளிவு ஏற்பட்டிருக்குமானால் நமது சமூகத்திற்கு எவ்வளவோ நன்மை உண்டாகும் என்கிற ஆசையே இதைப்பற்றி மேலும் மேலும் எழுதிவரவும் தூண்டுகிறது.

"குடி அரசு"

---

## அசரீரி வாக்கு.

மதுரை நாடார் மகாஜனங்களே! ஞாபகம்!!

நீங்கள் செல்வாக்குடன் பிரகாசிக்கவேண்டுமானால்-உங்கள் ஜாதியின் சுயமரியாதை காப்பாற்றப் பெறவேண்டுமானால்—நீங்கள் ஐக்கியமுள்ள ஜனசமூகமென மதிக்கப்பெற வேண்டுமானால்—உங்கள் கௌரவம் செழித்தோங்கவேண்டுமானால்,

**14-வது வார்டு முனிசிபல் எலெக்ஷனில்**

"நாடார் அபேக்ஷகருக்கே" உங்கள் (ஓட்) வாக்கைக் கொடுங்கள். மற்றவர்களையும் கொடுக்கும்படி ஏற்பாடு செய்யுங்கள். உங்களின் கட்டுப்பாட்டையும் ஒற்றுமையையும் நிரூபித்துக்காட்டவே இந்த எலெக்ஷன் வந்திருக்கிறது. நன்மைக்காக ஏற்பட்டுள்ள சோதனையில் ஏமாந்துவிடாதீர்கள். தன்கையே தனக்குதவி என்பதையும் மறந்துவிடாதீர்கள். நாடார் அபேக்ஷகருக்கு ஜெயம் உண்டாகுக.

ஓர் நிருபர்.

---

## பிரிவுபசாரம்.

திருச்சினாப்பள்ளி புத்தூர் "ஆல்ஸெயின்ட்ஸ் சர்ச்" (சர்வ சாது கிறிஸ்தவர் கோவில்) ஐயர் சங்கைக்குரிய ஜான் ஜி. கோவில் பிள்ளை பி. பி. டி. அவர்கள் தஞ்சாவூருக்கு மாற்றிப்போகவிருந்த தினமாகிய 10—8—27-ல் மாலை $5\frac{1}{2}$ மணிக்கு ஷை கோவில் சபையின் சார்பாக அன்னவருக்கு ஓர் பிரிவுபசாரம் நடத்தப்பெற்றது. ஐயரவர்கள் இவ்விடமிருந்து வந்த சென்ற 4 வருடங்களுக்குள் கோவில் முற்போக்கும், வாலிபருக்குள் புத்துணர்ச்சியும், பொருளாதார மேம்பாடும் உண்டாக்கி வைத்ததை குறித்து ஷை சபையின் சில முக்கிய அங்கத்தினர்கள் பாராட்டிப் பேசினார்கள் என்று ஸ்ரீமான் வ. எஸ். நெல்லையா அவர்கள் எழுதுகிறார்கள்.

---

## 11-வது மகாநாடு, கும்பகோணம்.

### உபசரணைக்கமிட்டி அறிக்கை.

மகாநாடு அக்டோபர்மீ 1, 2, 3உ களுக்கு தமிழ் புரட்டாசிமீ 15, 16, 17உ களில் கூடுவதாகும். இடம், ஆண்மனைத் தோட்டம் தியேட்டர். சமையல் சாப்பாட்டுக்கு ஷை தோட்டம் விசாலமாக இருப்பதால் அதிலேயே பெரிய கொட்டகை அமைக்கத் தீர்மானித்திருக்கிறது. இத்தோட்டத்தில் ஒரு தடாகமிருந்தாலுங் கூட சமையல் சாப்பாடு முதலிய உபயோகத்திற்குப் போதிய சுத்த ஜலம் வண்டிகள் மூலம் கொண்டு வரப்படும். அல்லது குழாய் அமைத்துத் தாராளமாய் ஜலம் வரச் செய்யப்படும்.

வெளியூர்களிலிருந்து வரும் பிரதிநிதிகள் தங்குவதற்கு நல்ல விடத்தில் பெரிய கட்டடங்கள் பலதைக் குறிப்பிட்டும் அதற்குடைய கனவான்களைக் கண்டு பேசியும் அதனால் இதுவரை 1500 பெயர்கள் தங்கக் கூடிய 3 கட்டடங்கள் இப்பொழுதே நமக்குக் கிடைத்து விட்டதாக நம்பும் நிலைமையிலிருக்கிறது. மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி இம் மூன்று ஜில்லாக்களிலிருந்தும் ஏராளமான பிரதிநிதிகளின் வருகையைக்கொண்டு அப்பொழுது "நாடார்கள் கான்பரன்ஸ் ஸ்பெஷல்" என்று மதுரையிலிருந்து தனி ஸ்பெஷல் வண்டி ஒன்று வர தென்னிந்திய ரெயில்வே கம்பெனியாரிடம் முன்னதாகக் கேட்டு கலந்து கொண்டு முடிவு செய்ய உத்தேசம்.

இக்கான்பரன்ஸிற்கு கௌரவ அக்கிராசனம் வகிக்க மனமுவந்த உயர் திருவாளர் ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அவர்களின் அக்கிராசனப் பிரசங்கம் முதல் கான்பரன்ஸ் முடிவு பெறும்வரை சகல நடவடிக்கைகளும் தமிழிலேயே இருக்க வேணுமாயும், கதரை அபிமானிப்பதோடு கதர் வஸ்திரமே யாவருமணிந்து வந்தால் நலமாயிருக்குமென்றும் பெரும்பாலாருடைய பேரவாவாக இருக்கிறது. கான்பரன்ஸ் டிக்கெட் விற்பதற்கும், வெளி ஜில்லாக்களுக் கனுப்புவதற்கும் தக்கவரை தெரிந்தெடுத்து அனுப்புவதற்கும் மேல் ஆக வேண்டியதைத் துரிதமாய் நடத்தவும் கமிட்டியாரனைவருமடங்கிய கூட்டம் 14—8—27 ஞாயிற்றுக் கிழமை கூடுவதில் முடிவு பெறும்.

டிக்கெட்டுவெளிஜில்லாக்களில்போய் விற்கவும், மொத்தமாக டிக்கெட்டுகள் தருவிக்கவும் அழைப்புப் பத்திரிகை சுவற்றில் ஒட்டும் பெரிய எழுத்து நோட்டீஸ்கள் யார் யார் விநியோகம் செய்ய முன் வருகிறார்களோ அவர்கள் நமது மதுரை தலைமைச் சங்க ஆபீஸ் துவாரகவோ,அல்லது அறிமுகமுடைய வரைக்கொண்டோ உபசரணைக்கமிட்டி ஆபீஸிற்குத் தெரிவித்தால் உடனே கவனித்து அதன்படி செய்ய சௌகரியமாக இருக்கும். இக்கமிட்டி ஆபீஸ், கும்பகோணம் ஸ்ரீ நாகேஸ்பர சுவாமி கோவில் வடக்கு வீதி, (பால்ய நாடார் சங்க கட்டட) மாடியில் அமைத்திருக்கிறது. தந்தி விலாசம்:— "மகாநாடு, கும்பகோணம்". கடிதமெழுதுபவர்களும், தந்தி சொல்பவர்களும் மேற் கண்ட விபரப்படி எழுதவும்.

### பின் வந்த செய்தி.

சென்ற 14—8—27 ல் நடந்த கூட்டத்தின்படி டிக்கெட் வகையறா விநியோகம் செய்யச் சிலரைத் தெரிந்தெடுத்திருக்கிறார்கள். மற்றவரையும் தெரிந்தெடுத்து இன்னாரின்னார் இன்ன இன்ன பக்கம் புறப்படுவார்களென்பது சமீபத்தில் வெளிவரும். கும்பகோணம் ஸ்ரீ ஆதிகும்பேஸ்வர சுவாமி கோவில் மேல வீதியிலிருக்கும் ஸ்ரீமான் பெ. கா. பெரியண்ண நாடார் நாட்டாண்மைக்குட்பட்ட உறவின் முறையார்களுக்குச் சொந்தமான பொதுக் கட்டட மாடியிலும் பிரதிநிதிகள் தங்க வசதியின் பொருட்டு உபசரணைக் கமிட்டி செலவில் கொட்டகை மாடி முழுதும் பெரிதாக அமைத்துக்கொள்வதாகவும் ஏற்பாடு செய்திருக்கிறது.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

[2-ம் பக்கத்தின் தொடர்பு]

நற்புகழ்ச்சி செய்து கொண்டிருந்தேனல்லவா? அச் சர்வமெல்லாம் எங்கோ ஓடி ஒளிந்து கொண்டது. நான் எதர்சாக சிங்கப்பூருக்கு வந்தேன்; இங்கிருந்து எக்காரணத்தை முன்னிட்டு நீர் ஜாவா தீவிற்குச் செல்லவேண்டும்; அங்கு எவ்வளவு காலம் தங்கியிருக்க நேரிடும் என்ற பலவாறான கதைகளை டச்சு மந்திரியிடம் புலம்பவேண்டியதாயிற்று. நான் சிறிது காலத்திற்கு முன்பு டென்மார்க்கில் பிரயாணம் செய்துகொண்டிருந்தேன். அச்சமயத்தில் அங்குள்ள பல பிரமுகர்களிடமிருந்து எனக்குக் கடிதங்கள் வந்திருந்தன. இவை என் ஞாபகத்திற்கு அப்பொழுது வந்தன. அவைகளில் முக்கியமான சிலவற்றை டச்சு மந்திரியிடம் காண்பித்தேன். இறைவனருளால் எனக்கு அனுமதிச் சீட்டு யாதொரு சிபாரிசுமின்றி கிடைத்தது. உடனே நான் அளவில்லா ஆனந்தங் கொண்டேன். எல்லைகடந்த மகிழ்ச்சியை யடைந்தேன். எங்கள் முன்னோர் சென்று குடியேறி, நாகரீகமும், புகழும், வீரமும் ஓங்கச்செய்த நாட்டை எப்போது போய்க் காண்பேன் என்ற ஆர்வம் அதிகரித்தது.

அடுத்த கப்பல் எப்பொழுது புறப்படுகின்றதென விசாரித்தேன். சிங்கப்பூருக்கும், படேவியாவிற்கும் போகவர 90 டாலர்கள் கப்பல் கட்டணமென அறிந்தேன். இவ்விரண்டு இடங்களுக்கும் போய் வந்து கொண்டிருக்கும் கப்பல்கள் அனைவற்றிலும் அதிக வசதியுள்ள டச்சுக் கப்பலே மிக்க சிறந்ததாகக் காணப்பட்டது. கிழக்கு மகா சமுத்திரத்தில் ஓடும், பிரிட்டிஷ் இந்தியா கம்பெனியின் கப்பல்களோ, அல்லது வேறெந்த கப்பல்களும், நான் மேற்கூறிய டச்சுக் கப்பலுக்கிணையாகாது. காற்றுவசதியோ, இடவசதியோ, மற்றும் சுகமாகப் பிரயாணம் செல்வதற்குரிய சகல வசதிகளும் டச்சுக்கப்பல் களிலிருப்பதாக எனக்குத் தோற்றியது.

### ராபிள்ஸ் காட்சி சாலை.

ஸர். ஸ்டாம் போர்டு ராபிள்ஸ் என்பவர் ஓர் பெரிய வீரர். இவர் டச்சு தேசத்தவர். 1810-ம் வருடத்திலிருந்து 1815-ம் வருடம்வரை ஜாவா ராஜ்யபாரத்தை நடத்திவந்தார். நெப்போலியன், ஜாவாவைக் கைப்பற்ற எண்ணிய அக்காலத்தில் ஸர். ஸ்டாம்போர்டு ராபிள்ஸ், ஜாவாவை வெகு திறமையுடன் ஆண்டு வந்ததால் பிரான்சுக்காரர்களால் ஜாவாவைக் கைப்பற்ற முடியவில்லை. அன்று தொட்டு இன்றுவரை, ஜாவா டச்சுக்காரர்கள் வசமே இருந்து வருகிறது. மேற்கூறிய வீரரின் ஞாபகச் சின்னமாக ஒரு பெரிய காட்சிசாலை சிங்கப்பூரில் அமைக்கப்பட்டிருக்கின்றது. இக்காட்சிசாலையில் புராதன சரித்திர சம்பந்தமான பல ஞாபகச்சின்னங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. மேனாட்டு நாகரீகமும், கீழ்நாட்டுநாகரீகமும் கலந்து பழகுவதை சிங்கப்பூரில் நாம் நன்றாய்க் காணலாம். ஆனால் ராபிள்ஸ் காட்சிசாலையில், பண்டைக்காலப் பெருமைவாய்ந்த பொருள்களே காணப்படுகின்றன. புராதன காலங்களில் உபயோகிக்கப்பட்ட ஆயுதங்களும் யுத்த சாமான்களும் அங்கு காணக் கிடைக்கின்றன. புத்தமதச் சின்னங்களில் சிலவற்றை அங்கு கண்டேன். மகததேச மன்னர்கள், புத்தமதத்தை பரப்பவேண்டுமென்ற நோக்கத்துடனோ, அல்லது படையெடுத்து ராஜ்யங்களைக் கைப்பற்ற வேண்டுமென்ற எண்ணத்தோடோ இங்கு வந்திருக்க வேண்டுமென ஊகிக்கவேண்டியிருக்கிறது. சுருங்கச்சொல்லின், இந்து மதத்தின் பண்டைப் பெருமைகளை நிரூபிக்கக்கூடிய பல ஞாபகச் சின்னங்கள் அக்காட்சிசாலையில் வைக்கப்பட்டிருக்கின்றன. சிங்கப்பூருக்குப் புதிதாகச் செல்பவர்கள் பார்க்கக் கூடிய அதிசயம் இக்காட்சி சாலையைத் தவிர வேறொன்றுமில்லை.

### ஜாவாப் பிரயாணம்.

நான் முற்கூறிய டச்சுக்கப்பலில் ஜாவாவிற்குப் பிரயாணமானேன். கப்பலில் ஏறியதும் சிங்கப்பூர் துறைமுகத்தை உற்று நோக்கிக் கொண்டேயிருந்தேன். கப்பலும் நகர்ந்தது. துறைமுகமும் கொஞ்சங் கொஞ்சமாய் மறைந்துகொண்டே வந்து கடைசியில் கண்ணுக்கெட்டாத தூரத்தில் ஆழமான கடுக்கடலை யடைந்தோம். கடல் மிகவும் அமைதியாகவேயிருந்தது. மந்தமாருதம் வந்து, வீசவே என் மனம் ஆனந்த பரவசமடைந்தது. கொந்தளிப்பான கடலில் இரவும், பகலும் பிரயாணம் செய்கையில், என்று கரையைக் காண்போம் என ஏங்கித்தவித்த எனக்கு கொந்தளிப்பில்லாத, அமைதியான கடலில், பிரயாணம் செய்யுங்கால் ஏற்படும் குதூகலத்திற்கு எல்லை தானுண்டோ? முதல் நாள் மாலையில் புறப்பட்ட எங்கள் கப்பல் மறுநாள் பாங்கா என்னும் ஜலசந்தியைக் கடந்து, சுமத்திரா தீவையும் கடந்து விட்டது. பாங்கா ஜலசந்தியோடு சுமத்திராதீவும் இணைக்கப்பட்டிருக்கிறது. தங்கம், வெள்ளி முதலிய சுரங்கங்கள் சுமத்திரா தீவில் ஏராளமாயிருக்கின்றன. ராமாயணத்தில் கூட, இத்தீவைப்பற்றி எழுதுகையில் தங்கமும், வெள்ளியும் சிந்திக் கிடக்கும் நாடெனச்சொல்லப்பட்டிருக்கிறது. இந்துக்கள் இத்தீவுகளில் குடியேறிய காலத்தில் இத்தீவின் செழிப்பைப் பார்த்து இங்கேயே 'ஸ்ரீ விஜய' என்னும் ராஜ்யத்தை ஸ்தாபித்து அவர்கள் ஓர் ஆயிரம் வருடம் ராஜ்யபாரம் நடத்துகையில் கீழ்நாட்டு சிற்ப சாஸ்திரத்தை மிகவும் அபிவிருத்தி செய்திருக்கிறார்கள். என்பதை நிரூபிக்கப் பல சான்றுகள் இங்கே காணப்படுகின்றன. சுமத்திராதீவில் பல அடர்ந்த காடுகள் தோற்றுகின்றன. ஆகாயத்தை அளாவி நிற்கும் நூற்றுக்கணக்கான மரங்கள், சைலேந்திர பரம்பரையாரின் ராஜ்யத்தைப் பற்றி புகழ்வதுபோல் காணப்படுகின்றன. இவ்விசக் காட்சிகளைப் பார்த்துக் கொண்டே நாங்கள் படேவியாவை யடைந்தோம். படேவியாவிற்கும் சிங்கப்பூருக்கும் 523 மைல்களிருக்கின்றன. நாங்கள் 40 மணி நேரப் பிரயாணத்தில் சிங்கப்பூரிலிருந்து படேவியாவிற்கு வந்து சேர்ந்தோம். படேவியா நகர் 20 மைல் தூரமிருக்கிறது. ரயில் மார்க்கமாயாவது, மோட்டார் மூலமாயாவது துறைமுகத்திலிருந்து நகருக்குச் செல்லலாம். என்னுடைய வரவை எதிர்பார்த்திருந்த சில நண்பர்கள் துறைமுகத்திற்கு வந்து என்னை அங்கிருந்து நகருக்கு அழைத்துச்சென்றனர். படேவியா நகர் மிக்கச் சிறப்பு வாய்ந்த நகரெனவே கூறலாகும். தெருக்கள் அழகாகவும், சுத்தமாகவும் காணப்படுகின்றன. அழகிய தோட்டங்களும், உயர்ந்த கட்டடங்களும் தெருக்களை மிக்க அழகுபடுத்துகின்றன. கிழக்கிந்திய தீவுகளில், டச்சுக்காரர்களுக்குச் சொந்தமான தீவுகளுக்கு படேவியா தலைநகராய் விளங்குகின்றது.

இங்கு ஒரு பெரிய கல்லூரியிருக்கின்றது. இக்கல்லூரியின் தலைமை ஆசிரியர் ஸ்ரீ சார்ப்போரல் என்னை மிகுந்த குதூகலமாய் வரவேற்று, உபசாரம் செய்தார். இப்படிக்கிடைத்தது நான் செய்த தவப்பயனே. இக்கல்லூரி மிகவும் அபிவிருத்தியடைந்து வருவதாலும், இங்குகற்பிக்கப்படும் கல்வி மிக்கச் சிறந்ததாயிருப்பதால் ஏராளமான மாணவர்கள் இங்குபயிற்சி அடைகின்றனர். இக்கல்லூரியைச் சார்ந்த ஒரு கட்டடத்திலேயே நான் தங்கியிருக்கவேண்டுமென வேண்டிக் கொண்டதற்கிணங்க, நானும் சம்மதித்தேன். அங்கு தங்கியிருக்காமல் போனால், மற்ற பிரயாணிகள் போல் ஏதாவது ஒரு ஹோட்டலில் போய் தங்கியிருக்கவேண்டி நேரிட்டிருக்கும். எனினும் கல்லூரி தலைமை ஆசிரியரின் உபசாரத்திற்கு, ஹோட்டல் வாழ்க்கை இணையாகாது என்பதை எவரும் மறுக்க முடியாது.

### இங்கும் கவி. ரவீந்திரரா?

நான் மேற்கூறிய கல்லூரியைப் போய் பார்வையிட்டேன். நம் நாட்டிலுள்ள கல்லூரிகளிலும், சர்வ கலா சாலைகளிலும் பல வருடங்கள் கல்வி கற்றும், கடைசியில் அக்கல்வியால் அவர்களுக்கு யாதொரு உதவியுமின்றி வயிற்றுப்பிழைப்புக்குஒரு தொழிலைத் தேடிக்கொள்ளக்கூட சக்தியில்லாது திண்டாடுகிறதை நாம் அனுபவத்தில் பார்த்துவருகிறோம்.

ஆனால் நான் படேவியாவில் கண்ட கல்லூரியோ அவ்விதமில்லை. மாணவர்களுக்கு ஏது இன்றியமையாத கல்வியோ, அதை அக்கல்லூரி கற்பித்து வருவதைக் கண்டு நான் கழி பேருவகை யடைந்தேன். அதிமட்டுமோ! உலக முழுதும் புகழப்படும் கவி. ரவீந்திரரின் நூல்கள் இங்குள்ள கல்லூரியின் பாடமாக வைக்கப்பட்டிருப்பதைக் கண்டு நான் அளவில்லா ஆனந்தமடைந்தேன். ரவீந்திரரின் கவித்திறத்தை மெச்சாதார் எவருமிலர். பல்லாயிர மைல்களுக் கப்பாலுள்ள கிழக்கிந்திய தீவுகளிலும்கூட அவரது பெருமை எட்டியிருக்கிறதென்பதைக் கேட்கும் எந்த இந்தியனும், பெருமகிழ் வெய்தவானென்பதற்கு ஐயமுண்டோ? அன்னவருடைய கவிகளை டச்சு பாஷையில் மொழி பெயர்த்து அவைகளை மாணவர்களுக்குப் போதிப்பதால் கிழக் கிந்திய தீவிலுள்ளவர்களுக்கு தேசாபிமானம் எவ்விதம் ததும்புகின்றதென்பது வெளியாகிறதல்லவா? இவ்விதம் தேசாபிமானமும் நம் நாட்டிலுள்ளோருக்கு என்று உண்டாகும்? என நான் என்னையே வினவிக்கொள்கிறேன்.

இக்கல்லூரியில் ஆசிரியராயிருக்கும் ஒரு பண்டிதர் எனக்கறிமுகம் செய்விக்கப்பட்டார். இவருடைய குடும்பத்தாருக்கு 'சாஸ்திர வீரியர்' என ஒரு பட்டமளிக்கப் பட்டிருப்பதாக என்னிடம் அவர் தெரிவித்தார். நம் நாட்டிலுள்ள பண்டிதர்கள் புராதன நூல்களின் பெருமையை அறியாதிருக்கின்றனரே என்ற கவலையும் எனக் கேற்பட்டது. வடமொழியின் சிறப்பைப்பற்றி நான் இப்பண்டிதரிடம் சிறிது நேரம் பேசிக்கொண்டிருக்கையில், பகவத் கீதையிலிருந்து சில சுலோகங்களைச் சொல்லும்படி என்னைக்கேட்டார். நான் அவ்விதமே செய்தேன். பகவத் கீதையை கிழக்கிந்தியர் ஒரு வேதப்புத்தகமாகக் கொண்டாடுகிறார்களெனக் கேட்டு ஆச்சரியமடைந்தேன். அது எனக்கு பெரு மகிழ்ச்சியையும் உண்டுபண்ணிற்று.

### சங்கீதமும் நாடகமும்.

#### மகாபாரதப் பெருமை.

இவ்விதமாக நான் ஜாவாவில் தங்கிய முதல் நாளே அங்குள்ளவர்களைப் பற்றி நன்றாய் அறிந்துகொண்டேன். அன்று மாலை அவர்களுடன் பேசிக் கொண்டிருக்கையில் கவி. ரவீந்திரரைப்பற்றியும், அவருடைய 'சாந்த நிகேதன்' தைப்பற்றியும் அவர்களுக் கெடுத்துக்கூறினேன். மாலையில் கல்லூரி மாணவர்களெல்லாம் ஓர் மைதானத்தில் கூடி பஜனை நடத்தினர். சிலர் ஒரு சிறு நாடகம் நடத்திக் காண்பித்தனர். சிலர் கீதங்கள் பாடினார். அதன்பின்பு, சில இளைஞர்கள் கத்திச்சண்டை விளையாட்டுகளை காண்பித்தனர்.

ஜாவாவிலுள்ள மாணவர்கள் மகாபாரதத்தை நாடகமாக நடித்துக் காண்பிப்பதில் மிக்கத் திறமைவாய்ந்தவர்களெனச் சொல்லப்பட்டது. அவ்வண்ணமே சிறுவர்களும் சிறுமிகளும் ஒருநாள் இரவில் மகாபாரதக்கதையை நாடகமாக நடத்தினார்கள். இந்திய புராணங்களில் சிறந்த மகாபாரதத்தை கிழக்கு இந்தியர்கள் நன்றாய் அறிந்திருக்கிறார்களென்பதைக் கண்டு அவர்களை என் வாயார வாழ்த்தினேன். அன்றிரவு பார்த்த மகாபாரத நாடகம், என்னுடைய கண் முன்பு பல நாட்கள் வரை தோற்றிக்கொண்டேயிருந்தது. அச்சிறுமிகளும், சிறுவர்கள் பாடிய பாடல்களும், நடிப்புத்திறமையும் இன்னும் என் மனதைவிட்டு அகலவில்லை. மகாபாரத யுத்தத்தை நேரில் கண்டு அனுபவிக்கும் பாக்கியம் கிட்டும்படி மகாபாரத காலத்தில் வசித்தோமில்லையே என்றுகூட நான் சிறிது கவலைபடைந்தேன். இந்தியாவின் புராதனப் பெருமையையும், புகழையும் தங்கள் தேசத்தில் இன்னும் நிலை நாட்டியிருக்கும் கிழக்கிந்தியத் தீவுகளும், அவைகளின் குடிகளும் நீடூழி வாழ்வார்களாக.

# மனம்.

மனம் என்பதற்குரியது மூன்றெழுத்து. முன்னிரண்டு எழுத்துக்களிலும் ஈற்றெழுத்து உயிர் நீங்கலாக நின்றது இதன் உறுப்பு. அதாவது "மன்" என்பதாம். இனி இத்துடன் "அம்" என்னும் சாரியைப் பெயர்விகுதி சேர "உடல மேலுயிர் வந்தொன்றுவதியல்பே" என்னும் சூத்திரப்படி "மனம்" என நின்றது. இதன் பகுதியாகிய 'மன்' என்பதற்கு அழகு, பெருமை, மிகுதி எனப் பொருள் பயக்கும்.

'மனிதன்' என்ற மக்கட் பெயரும் இதனடியாகவே பிறந்ததெனச்சொல்லலாம். அதாவது மன்—அன் மனன் எனவும், மன்—த்—அன் என தகர இடைநிலை சேர மனதன் எனவும் னகரமெய் இகர உயிர் ஏற்க மனிதன் எனவும் தகர இடைநிலை சகர டகரமாகத் திரிய மனிசன், மானிடன் எனவும் இகரம் உகரமாகத்திரிய மனுசன் மானுடன் எனவும் பலவிதமாக விரித்து வழங்கும். ஆனால் இவையாவும் 'மனம்' என்னும் பெயரடியாகவே பிறக்கப்பட்டன என்பது விளக்கம். மன உறுதியுடையவன் மனிதன் என்பது பொருள்.

மன் என்பதற்கு அழகு, பெருமை, மிகுதி எனமுன்னே எடுத்துக்காட்டப்பட்டது. புவியாவும் கட்டியாளுகிற சக்கரவர்த்திக்கு "மன்னன்" என்றும் பெயர் வழங்குவதை இங்கு கவனிக்கத்தக்கது. இத்தியாதிகாரணங்களால் மனிதனுடைய சகல உறுப்புகளையும் ஆண்டுவரும் அரசன் "மனம்" என்பது வெளிப்படை. "மனத்தானாம் மாந்தர்க்குணர்ச்சி" எனவும் "மனநலம்மன்னுயிர்க்காக்கம்" எனவும் "மனநல நன்குடையர்" "மனநலத்தினூஉங்கும் மறுமை" எனவும் "மனத்துக்கண் மாசிலனாதல்" எனவும் "மனத்தொடு வாய்மை மொழியில் தவத்தொடு தானஞ்செய்வாரில் தலை" எனவும் இன்னும் பலவாறாக தவசிரேஷ்டரான பொய்யாமொழிப் புலவரும் "மனத்தனையர் மக்களென்பார்" என நாலடியாரும் கூறிப் போந்தார். மன ஊக்கம் குறைந்தவன் இம்மையில் வாழ்தலரிது. "மனவுறுதி" என்னும் சற்குணமுடையாருக்கு, கனலும் புனலாகும்; பெருங்கடலும் சிறுகுளமாகும்; மகாமேருவும் சிறுபாறையாகும்; சிங்கமும் சிறுமானாகும்; நல்ல பாம்பும் மெல்லிய மாலையாகும்; நஞ்சும் நல்ல முதமாகும்; கடுந்துன்பமும் இன்பக்கடலாகும். மேலும் மரம் வெட்டுண்டு குன்றினும், சந்திரன் தேய்ந்து குறையினும் அழிவுறாது வளர்வதேபோலும், எரிசுவாலையை தலை கீழாகப் பிடிக்கினும் கனல் அவியாது மேனுமவது போலும் தமது முயற்சியில் சிறிது அயர்வரினும் தமது இனத்தார் சில்லிக்கட்படினும் அடுக்கடுக்கி விக்கட்டுகள் வரினும் அவற்றினால்மனஊக்கம் உலைவுறார்.

"உள்ளமுடைமை யுடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கிவிடும்."

தடாகத்தின் தாமரை நீர் மட்டமே அதன் மலரும் ஆவதுபோல தனது மனஊக்கத்தளவு உயர் உள்ளவனாயிருப்பான். ஆகவே "மன்னவன் கோனேக்கிவாழுங்குடி" என்பது போல மனிதப்பிறவி ஆக்கமுறுவதும் அழிவுறுவதும் மனமேகாரணம். ஆகலான் மனத்தங்காப்பர்களாக.

"மயிர் நீப்பின் வாழாக்கவரிமாவன்னார்
உயிர் நீப்பர் மானம் வரின்"

கி. மு. ம. மரியந்தோனிநாடார்,
வடக்கன்குளம்.

---

கதியான குதிரை யொக்கும்
காண் மனம்—அதனை
மதியான வாய்வடத்தான்
வழி நடத்துக.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## தேவை.

டிம்பி சயிஸ் பவர் பின்ட்ரிடிங் மிஷன் பழய விலைக்குத் தேவை. விலை விபரத்துடன், பத்திராதிபர் "நாடார் குல மித்திரன்" அருப்புக்கோட்டை என்ற விலாசத்திற்கு எழுதவும்.

## இரவில் மணிபார்க்கும் ரேடியம்ரிஸ்லெட்கெடியாரம்



இந்தக் கெடியாரத்தில் இரவில் எவ்வளவு இருட்டாயிருந்தாலும் விளக்கு வெளிச்சமில்லாமல் மணி நன்றாய்த் தெரியும். கையில்கட்டும் தோல்பட்டையுடன் விலை ரூ 6-8-0.

விலாசம்:- கை அண்டு கம்பெனி,
பார்க்டவுன்போஸ்ட், மதராஸ்

## "1000 தொழில் முறைகள்."

சலவைசோப், இங்கி, மெழுகுவர்த்தி, இரகசியமை, சர்பத்து, செயற்கை தங்கம், கண்ணாடியை ஒட்டும் சொலுஷன், பெப்பர்மெண்டு, ரசம் பூசுதல், தங்கலிவிட், சிகரெட்டு, தீக்குச்சி, ரோமசம்ஹாரி, அத்தர், பற்பொடி, நரைமயிர்கருக்குந் தைலம், வீரியவிர்த்தி மாத்திரை, தேள் விஷ சஞ்சீவி, அஞ்சனம் முதலிய 1000 அபூர்வ செய்முறைகள் அடங்கிய பெரிய புத்தகம் ரூ 4-0-0. வி. பி. வேறு. தன் விபரப் புத்தகம் இனும்! ஏமாந்துபோகவேண்டாம். ஷை பெரிய புத்தகத்தின் முக்கிய முறைகளடங்கிய "200 தொழில் முறைகள்" எனும் புத்தகம் 210 பக்கங்கள் உள்ளது ரூ 1-0-0 தான். சிலர் ஐந்தாறு போலிமுறைகளை ரூ $1\frac{1}{2}$ 2 என்ற விற்பதைப்பார்த்து ஏமாந்துபோக வேண்டாம். எமது கைத்தொழில் புத்தகங்களின் கேட்லாக்இனும்!

ஆர்ட்டபுகஸ் கம்பெனி, 18. திருச்சிறைப்பள்ளி.

13-ம் வருடம் பிறந்துவிட்டது! 13-ம் வருடம் பிறந்துவிட்டது!!

## "ஆனந்த போதினி".

ஓர் உயர்தர தமிழ் மாதப் பத்திரிகை.

48 பக்கங்களில் உயர்ந்த வியாசங்களுடன் வெளிவருவது.

தமிழ் நாட்டில் உள்ள மாத சஞ்சிகைகளில் முதன்மை பெறறது.

13 வருடங்களாக நடைபெற்றுவருவது.

20,000 சந்தாதார்களையுடையது. எல்லோரும் படிக்கத்தக்கது

இந்தியா, பர்மா, சிலோன் ஆகிய உள்நாடுகளுக்கு வருடச் சந்தா ரூ 1-0-0

பினங்கு, சிங்கப்பூர், நெட்டால் முதலிய வெளி நாடுகளுக்கு வருடச் சந்தா ரூபா 1—4—0. மாதிரிக் காப்பி இனும்.

விலாசம்:—"ஆனந்த போதினி" ஆபீஸ்,
நெ. 6. வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.

## சிட்டுக்குருவிச் சத்தின் லேகியம்.

எங்கும் பிரசித்தியானது! ஏராளமான நற்சாக்ஷிபத்திரங்கள் பெற்றுள்ளது! போன பலத்தை மீட்டிப் புதிய நலத்தைக் காட்டும் இம்மஹா அற்புதலேகியத்தை காலை மாலை இருவேளையும் சாப்பிட்டு உடனே கொஞ்சம் சுடுகையான பாலாகிலும் பாதம்பயிரிட்டு சுண்டகாய்ச்சிய பாலாகிலும் அருந்துவதால் இந்திரியம் நீற்றல், நித்திரை ஸ்கலிதம், துரிதஸ்கலிதம், காம்புத்தளர்ச்சி, இரத்தக்குறைவு, போகசக்தி குறைவு, இடுப்புவலி, கைகாலசதி, கண்ணெரிச்சல், மூளைக் கொதிப்பு, பசிமந்தம், பித்தமயக்கம், மலச்சிக்கல், நெஞ்சுவலி, பார்சவாய்வு, நித்திலாயின்மை, மறதி, க்ஷயம், குன்மம், மூலவியாதி, பெருமூத்திரம், நீரிழிவு, விரைவாதம், பாண்டு, வெள்ளை, வெட்டை, மலடு முதலிய வியாதிகளை நீக்கி இரத்த விர்த்தி உண்டாக்கி நரம்புகளை முறுக்கேற்றி தாதுபுஷ்டியை மிகைப்படச்செய்து இந்திரியத்தை மணிபோல் கட்டி தேகமினுமினுப்பும் முகவசீகரமும் திடகாத்திர வீரதைரியமும் தந்து மனைவியுடன் நீண்டகால சம்போகத்தையும் கொடுத்து சற்புத்திர சந்தான முண்டாக்கி நோயற்ற வாழ்வில் வாழச் செய்யும் திறமுடைத்து என்பது திண்ணம்.

40-நாள் 80-வேளை 16-பலம் டப்பி 1-க்கு விலை ரூ. 5—8—0.
20-நாள் 40-வேளை 8-பலம் டப்பி 1-க்கு விலை ரூ. 2—12—0.
வி.பி.தபால் செலவு பாக்கிங்செலவு முதலியவைகள் பிரத்தியேகம்.

பா. அப்துல்கரீம் சாய்பு,
கரீமியா யூனனி மெடிகல் ஸ்டோர், கூடலூர் O. T.

நாகரீக உலகத்தில் நவீனக நட்சத்திரம்!
உயர்ந்த சித்திரங்களமைந்த ஓர் உதய ஜோதி!!

பதுமையின்புதுமை! பகவதிமகிமை!! படிப்பதற்கினிமை!!!

எத்தனை நாவல்கள் வாசித்திருப்பினும் அத்தனைக்கும் விசித்திரமாய் சித்திரப்படங்களுடன் ரத்தினத்தோற்றம்போல் அற்புதக் கற்பிதச் சொற்சுவை பொருட்சுவை பொருந்தி உற்பவமான நற்றமிழ் நாவல்

## பவளப்பதுமை

அல்லது

## மலையாளத்து மர்மம்.

(ஓர் இனிய செந்தமிழ் நாவல்)

விலை ரூ. 1—4 விலை ரூ. 1—4

அதிசயம், அற்புதம், அநுபவம், ஜாலம், ரகசியம், மர்மம், மெஸ்மெரிசம், கண்கட்டு வித்தை, மாயத்தந்திரோபாயம், மோகினி, டாகினி, பேய், பிசாசு, காட்டேரி முதலிய துஷ்ட அருவங்களின் ஆச்சர்ய வசியம், முனீஸ்வரர் ஸ்தம்பன மோகனம், வியாபார மோசம், திருட்டுவைத்தியம், பகவதி மந்திரம், புராதன சுரங்கத்தில் புதையலெடுப்பது, மலைக்குகைகளில் மனிதர் வசிப்பது, சந்நியாசிகள் சாகஸம், யோகாப்பியாஸ மகிமை, சிவமயம் பெரிதா? பணமயம் பெரிதா? என்னும் பரிசிலனை, டாக்டர்கள் வல்லமை, யட்சணி வேலை முதலிய பல விஷயங்களின் நன்மை தீமையை உலக விநோதக் காட்சியாக விளக்கிக் காட்டும் உன்னதமான புதிய நாவிலிது வொன்றே. உடனே ஒரு புஸ்தகம் வாங்கி வாசித்து உண்மை யறிந்து பாருங்கள்.

250 பக்கம். நல்ல கிளேஸ் கடிதம். நான்கு சித்திரப்படங்கள். அழகான ராப்பர் பைண்டு செய்தது. புஸ்தகம் ஒன்றுக்கு விலை ரூபா 1-4-0 வி. பி. தபால்செலவு பிரத்தியேகம். முந்துங்கள் ஆர்டருக்கு முந்துங்கள்.

விலாசம்:—மானேஜர்
பூபதி புத்தகாலயம்,
தூத்துக்குடி.

எங்கும் கியாதி பெற்ற

## இரணியல் ஜரிகை வஸ்திரங்கள்.

சகல ஜாதியாருக்கும், மொத்தமாக வியாபாரிகளுக்கும் அவரவர் விருப்பத்திற்கிணங்கும்படி புடவை, கவணி, ஸாரி பல மாதிரி புளியிலைகரை கேரியல், ஜரிகைச் சேலை, விளிம்பு ஜரிகை துப்பட்டாக்கள், வேஷ்டிகள், கட்டி திணுசுகள், அநேக விதமான துண்டுகள், பட்டுத் துப்பட்டாக்கள் முதலிய எவ்வித வஸ்திரங்களும் உயர்வான தரமாக ஆர்டர் கிடைத்த 10 தினங்களுக்குள் வி. பி. மூலமாக அனுப்பப்படும். கூடுதல் விபரம் வேண்டியவர்கள் மானேஜர் மூலமாக அறிந்து கொள்ளலாம்.

இ. ஏ நீலகண்ட பிள்ளை,
மானேஜிங் புரோப்ரைட்டர்,
"இரணியல் கிளாத் ஸ்டோர்"
இரணியல், நெய்யூர் போஸ்டு, தென் திருவிதாங்கூர்.

## ஹார்லிமாத்திரைகள்.

இம்மாத்திரைகள் இரத்தத்தை விர்த்திசெய்து கெட்டுப்போன இரத்தத்தை சுத்திசெய்யவும், நீர்ச்சுருக்கு, குலைநோய், நெஞ்சுவலி, காசம், இருமல், குன்மம், சீதபேதி, வாந்திபேதி இன்னும் சகல வியாதிகளையும் நீக்கி பசி தீபனத்தை யுண்டாக்கி ஆயுளை விர்த்தி செய்கிறது.

30 மாத்திரைகள்கொண்ட டப்பி ரூ 1—0—0

விலாசம்;—வி. ஏ. ஞானப்பிரகாசம்,
டாக்டர் ஹார்லிதுரை பங்களா, தல்லாகுளம், மதுரை.

இனும் ரூபாய் 100! இதில் குணமில்லை யென்று நிரூபிப்பவர்களுக்கு.

## ஸ்ரீ கிருஷ்ண டெண்டல் பாம்.

மைசூர் கவர்ன்மெண்டாராலும், நியூயார்க், லண்டன், டோக்கியோ, பெர்லின், பாரிஸ், அகமதாபாத் முதலிய தேசங்களின் இன்டர்நேஷனல் சொசைட்டியாராலும் பரிசிலனை செய்யப்பட்டு நற்சாக்ஷிப்பத்திரம் பெற்றது. தந்த வியாதிகளைப்போக்கி பற்களை உறுதியாக்கும் பற்பொடி.

பாட்டில் 1-க்கு ரூ 0—4—0, டஜன் 1-க்கு ரூ 2—4—0, குரோஸ் 1-க்கு ரூ 24—0—0, பாக்கிங் & தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

அந்நிய நாடுகளுக்கு தபால் சார்ஜ் உள்பட ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும். ஸ்ரீகிருஷ்ண & கோ, மன்னார்குடி. S. I. Ry.

சு. ஆ. முத்து நாடாரால் அருப்புக்கோட்டை ஸ்ரீ முத்துமாரியம்மன் பிரஸில் அச்சியற்றி வெளியிடப்படுகிறது.